விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 224 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 15 வியாழக்கிழமை (31.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# குழந்தையை அரவணைத்தபடி மனித எலும்புக்கூடு மீட்பு

## செம்மணிப் புதைகுழி அகழ்வில் பதை பதைக்கும் மர்மங்கள்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் குழந்தை ஒன்றை அரவணைத்தபடி பெரிய மனித எலும்புத் தொகுதியுடன் சிறிய எலும்புத் தொகுதி அடையாளப்படுத்தப்பட்டு முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)



## கொழும்பில் 155 இந்திய பிரஜைகள் கைது

(கொழும்பு)

கொழும்பில் விசாக்காலம் முடிவடைந்து சட்டவிரோத மான முறையில் தங்கியிருந்த

16ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் காலத்து ஆயுதங்கள்

### தெற்கில் பாதாள கும்பல்களிடம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் காலத்து ஆயுதங்

02ஆம் பக்கம் பார்க்க

### லலித், குகன் காணாமல்போனோர் வழக்கு

## யாழ்.நீதிமன்றில் முன்னிலையாக மறுப்பு கொழும்பு நீதிமன்றில் சாட்சியமளிக்கத் தயார்

### முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய



(கொழும்பு)

லலித், குகன் காணாமல் போனோர் வழக்கில் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க மறுப்புத் தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொழும்பு நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கத் தயார் என்று அறிவித்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## பாம்புக்கடிக்கு இலக்கான இளைஞன் உயிரிழப்பு

### புத்தூரில் இசை நிகழ்வுக்கு சென்றபோது விபரீதம்



(யாழ்ப்பாணம்)

புத்தூரில் பாம்புக் கடிக்கு இலக்கான இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

### குழு இசைப் போட்டி முடிவு

## எதிர் மனுதாரர்களுக்கு மேல் நீதிமன்றம் கட்டளை

(யாழ்ப்பாணம்)

வட மாகாண மட்டத்தில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியின் குழு இசை பிரிவு இரண்டின் முடிவுகள் சுற்றுநிருபத்திற்கு முரணாக அமைந்துள்ளதாகத் தெரிவித்து, பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் சார்பில், சட்டத்தரணி விக்னராஜா சவீந்திரா அவர்களால் வட

15ஆம் பக்கம் பார்க்க

## நாவற்குழியில் 22 இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கு

### ஒகஸ்ட் 28ஆம் திகதி தீர்ப்புக்கு திகதியிடப்பட்டது

(கொழும்பு)

நாவற்குழிப் பகுதியில் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட 22 இளைஞர்கள் தொடர்பான ஆட்கொணர்வு மனுவுக்கான தீர்ப்பு ஒகஸ்ட் மாதம் 28 அன்று திகதியிடப்பட்டுள்ளது.

1996ஆம் ஆண்டு நாவற்குழி படைமுகாமில் இராணுவ அதிகாரியாகவிருந்த துமிந்த கெப்பிட்டிவலான தலைமையிலான படையினர் கைது செய்து கொண்டு சென்ற 24 இளைஞர்கள் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டனர்.

15ஆம் பக்கம் பார்க்க

## 4 மனித எச்சங்கள் நேற்றும் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் புதிதாக 4 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வின் 2ஆம் கட்டத்தின் 25ஆம் நாள் அகழ்வு யாழ்ப்பாணம் நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா மேற்பார்வையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வில் புதிதாக 4 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்

15ஆம் பக்கம் பார்க்க

## அச்சுவேலியில் மோ.சைக்கிள் மோதியதில் ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். அச்சுவேலியில் மோட்டார் சைக்கிள் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

16ஆம் பக்கம் பார்க்க

### சம்பூரில் மனித எச்சங்கள்

## கண்டெடுக்கப்பட்ட இடத்தில் தொடர்ந்து அகழ்வதா? இல்லையா?

### ஒகஸ்ட் 6ஆம் திகதி கூட்டம் நடத்த நீதிமன்றம் தீர்மானம்

(திருகோணமலை)

சம்பூரில் மனித எலும்பு எச்சங்கள் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் தொடர்ந்து அகழ்வு செய்வதா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க எதிர்வரும் ஒகஸ்ட் 6ஆம் திகதி விசேட கூட்டம்

02ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகள் ...

களைப் பதுக்கி வைத்திருந்து தெற்குப் பாதாள உலக உறுப்பினர்கள் மற்றும் குற்றவியல் கும்பல்களுக்கு வாடகைக்கு வழங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களை 90 நாட்கள் காவலில் வைக்க கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன அனுமதி வழங்கியுள்ளார்.

கடந்த ஜூலை 21ஆம் திகதி கிரிபத்கொட பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டபோது அவரிடம் T-56 துப்பாக்கி, 30 ரவைகள் கொண்ட மெகசின் மற்றும் 5.65 கிராம் "ஐஸ்" போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

அவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் இந்த மூவர் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் குறித்த T-56 துப்பாக்கியை வவுனியாவிலிருந்து கொழும்புப் பகுதிக்குக் கொண்டு சென்று, குற்றத்தைச் செய்ய மூன்றாம் தரப்பினரிடம் ஒப்படைத்து, பின்னர் அதை வவுனியாவிற்குத் திருப்பி அனுப்பும் திட்டங்கள் விசாரணையில் கண்டுபிடிக்கப் பட்டதாகப் பயங்கரவாத விசாரணைப் பிரிவு அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் குறித்த விடுதலைப் புலிகள் காலத்து ஆயுதங்கள் தெற்கில் குற்றங்களைச் செய்வதற்காக சேமித்து வைக்கப்பட்டிருந்தனவா? அல்லது பணத்திற்காக பாதாள உலக நபர்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களுக்கு வாடகைக்கு விடப்பட்டதா? என்பதைத் தீர்மானிக்க விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பாக மேலும் விசாரணைக்காக சந்தேக நபர்களைத் தடுத்து வைக்க பயங்கரவாத விசாரணைப் பிரிவு அனுமதி கோரியுள்ள நிலையில் நீதிமன்றம் தடுப்புக் காவலுக்கு அனுமதி வழங்கியுள்ளது. (ம-7)

# துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் நாடக பாட ஆசிரியர்
திரு.க.சந்திரகுமார் அவர்களின் அன்புத் தந்தை



**அமரர் செபமாலை கணேசன்**

எம்முடன்:-23.11.1931

எம்மைவிட்டு:-30.07.2025

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டுத் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயருடன்:-
ஆசிரியர், ஊழியர் நலன்புரிக் கழகம்
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

(C-3536)

## கண்டெடுக் ...

ஒன்றை நடத்த மூதூர் நீதவான் நீதிமன்றம் புதன்கிழமை தீர்மானித்துள்ளது.

இக்கூட்டத்தில் தொல்பொருள் திணைக்களம்,தடயவியல் பிரிவினர், சட்டவைத்திய அதிகாரி, புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகம், குற்றவியல் பிரிவினர், தேசிய நிலக் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தினர், பொலிஸ் திணைக்களம் என்பனவற்றின் அலுவலர்கள் நீதவான் திருமதி. தஸ்னீம் பௌசான் தலைமையில் ஒன்று கூடி ஆராய்வது என்றும் அதன் பின்னர் எடுக்கப்படும் தீர்மானத்திற்கமைய இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி 6 ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய தரப்புகளுக்கான அழைப்பை சம்பூர் பொலிஸார் அனுப்ப வேண்டும் எனவும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ம-7)

# INVITATION FOR BID 2025/11
# VALIKAMAM EAST PRADESHIYA SABHA
# NORTHERN PROVINCE

1. The **Chairman, Divisional Procurement Committee,** on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Tourism
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document**. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 Document
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025-07-31 To 2025-08-14** during **09:00 hrs and 15:00 hrs.**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Valikamam East Pradeshiya Sabha, Puttur **(T.P:021-205-8865, e.mail: pmdveps @ gmail.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Divisional Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | Document Issuing/Purchasing Period | | | From 2025-07-31 To 2025-08-14 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 2025-08-07 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 2.00 P.M on 2025-08-15 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period (Days) |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(13)/4/ Tourism/2025/01 | Establishment of Movable Food Stalls & Beautification works at Akkarai Beach | 4.24 | 63 | C9 or above (Building) | 2,500.00 | 43,000.00 | 31.10.2025 | 49 |

Chairman
Divisional Procurement Committee,
Valikamam East Pradesiya Sabha,
Puttur. (C-3532) 31.07.2025

# INVITATION FOR BIDS (IFB) IFB No : 2025/04
# VELANAI PRADESHIYA SABHA,
# VANGALAVADY JUNCTION, VELANAI.

1. The **Chairman, Divisional Procurement Committee,** on behalf of the Velanai Pradeshiya Sabha Invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
**"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"**
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in Schedule (Section 5) for SBD 3 Documents
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025-07-31 To 2025-08-13** during **09:00 hrs and 15:00 hrs.**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai. (T.P No: 021 221 1506, Fax No: 021 221 1506) **from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Secretary, Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai.**on or before 10.30 a.m as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall,** Velanai Pradeshiya Sabha, Vangalavady junction, Velanai. commencing at **11.00 A.M as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | Document Issuing/Purchasing Period | | | From 2025-07-31 To 2025-08-13 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 11.00 A.M on 2025-08-07 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 2025-08-14 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(18)/02/PSDG/06/ 2025 | Renovation of Day Halt at Punkudutivu Junction | 0.50 | 60 | C9 or above in Building Construction | 1500.00 | 6,000.00 | 30-10-2025 | 02-10-2025 |
| NP/14/41(18)/02/stampduty/01/2025 | Construction of Vivasaya Road at Velanai North | 2.44 | 60 | C9 or above in Highway Construction | 1500.00 | 25,000.00 | 30-10-2025 | 02-10-2025 |
| NP/14/41(18)/02/CF/2025/04 | Construction of Vivasaya veethy [illegible] velanai North | 1.03 | 60 | C9 or above in Highway Construction | 1500.00 | 11,000.00 | 30-10-2025 | 02-10-2025 |
| NP/14/41(18)/02/CF/2025/05 | Renovation of Thalaboorri Sudalai veethy | 0.84 | 60 | C9 or above in Highway Construction | 1500.00 | 9,000.00 | 30-10-2025 | 02-10-2025 |
| NP/14/41(18) /02/CF/2025/ 06 | Renovation of hospital Road at Mandaitivu | 0.34 | 60 | C9 or above in Highway Construction | 1500.00 | 9,000.00 | 30-10-2025 | 02-10-2025 |
| NP/14/41(18) /02/CF/2025/ 07 | Renovation of Vangalavady Veethy at Nainativu | 0.84 | 60 | C9 or above in Highway Construction | 1500.00 | 9,000.00 | 30-10-2025 | 02-10-2025 |
| NP/14/41(18)/02/CF/2025/ 08 | Renovation of Koori Kodathanah Veethy at Nainativu | 0.84 | 60 | C9 or above in Highway Construction | 1500.00 | 9,000.00 | 30-10-2025 | 02-10-2025 |
| NP/14/41(18)/02/PSDG/07/2025 | Renovation Of Radio Centre Road at mandaitivu | 1.60 | 60 | C9 or above in Highway Construction | 1500.00 | 16000.00 | 30-10-2025 | 02-10-2025 |

Chairman
Divisional Procurement Committee(DPC),
Velanai Pradesiya Sabha,
Vangalavady Junction, Velanai. (C-3530) 31.07.2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களிடையே விட்டமின் ‘டி’ குறைபாடு சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுப்பு

**(கொழும்பு)**

**சூரிய ஒளி இல்லாததால் சிறுவர்களிடையே விட்டமின் டி குறைபாடு, ஒரு கடுமையான உடல்நலப் பிரச்சினையாக மாறியுள்ளதாக சுகாதாரத்துறை எச்சரித்துள்ளது.**

மேலும் இது, 20 - 30 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பிரச்சினையாக இல்லை என்று, குழந்தை நல மருத்துவ ஆலோசகர் வைத்தியர் தீபால் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதுள்ள சிறுவர்கள் வெளியே சென்று வெயிலில் விளையாடுவதற்குப் பதிலாக, தங்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்குப் படிப்பது, தனியார் வகுப்புக்களுக்குச் செல்வது, இணைய விளையாட்டுக்களை விளையாடுவது, தொலைக்காட்சி பார்ப்பது மற்றும் அதிகமாக தொலைபேசிகளைப் பயன்படுத்துவது போன்றவற்றில் மிகவும் மும்முரமாக உள்ளனர்.

இந்த செயற்பாடுகளுக்கு மாறாக, சிறுவர்கள் வெளியே சென்று விளையாட அனுமதிக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், மத்திய கிழக்கு நாடுகளில் அதிக வெப்பம் காரணமாக வெளியே செல்வது கடினம்.

அதேபோல், ஐரோப்பிய நாடுகளில் நிலவும் குளிரான காலநிலையால் அங்குள்ள சிறுவர்களிடையே விட்டமின் டி குறைபாடு காணப்படுகின்றது.

ஆனால், இலங்கையில் இயற்கையாகவே சூரிய ஒளியிலிருந்து விட்டமின் டி யினைப் பெற முடிந்தாலும், சிறுவர்களிடையே அதிகமாக விட்டமின் டி குறைபாடு காணப்படுகின்றது.

மேலும், அடுத்த தலைமுறைக்குச் சூரிய ஒளி வெளிப்பாடு மிகவும் முக்கியமானதொன்று எனவும், சூரிய ஒளி வெளிப்பாட்டிற்குச் சிறந்த நேரம் காலை 9 மணி முதல் 11 மணி வரை என்றும் தீபால் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நெத்தலி, முட்டையின் மஞ்சள் கரு மற்றும் முருங்கை இலைகள் போன்ற விட்டமின் டி நிறைந்த உணவுகளை உண்பதற்கும் அவர் பரிந்துரைத்துள்ளார். (நி)

## உலகில் மிகவும் அழகான தீவாக இலங்கை தேர்வு

(கொழும்பு)

உலகளாவிய பயண தளமான ‘Big 7 Travel’ தொகுத்த உலகின் 50 சிறந்த தீவுகள் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்து, இலங்கை உலகின் மிக அழகான தீவாக முடிசூட்டப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான பட்டியலில் பிரெஞ்சு பாலினேசியாவின் மோரியா, ஈக்வடாரில் உள்ள கலபகோஸ் தீவுகள் மற்றும் சீஷெல்ஸ் போன்ற பிரபலமான தீவுகளை முந்தி முதலிடத்துக்கு வந்துள்ளது.

Big 7 Travel தகவலின் படி, இலங்கை அதன் வளமான கலாச்சார பாரம்பரியம், மாறுபட்ட நிலப்பரப்புகள் மற்றும் அழகிய கடற்கரைகள் ஆகியவற்றின் கலவைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தீவு தேசத்தின் தனித்துவமான வனவிலங்குகள், பழங்கால கோயில்கள், பசுமையான தேயிலைத் தோட்டங்கள் மற்றும் சுறுசுறுப்பான உள்ளூர் சுற்றுலா பகுதிகளுக்காக இந்தப் பட்டியலில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் சுற்றுலாத் துறை அதன் நிலையான மீட்சி மற்றும் மாற்றத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில், இந்த உலகளாவிய அங்கீகாரம் மேலும் அதனை முன்னேற்ற நிலைக்கு கொண்டு செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

## உயர்தர தொழிற்கல்விக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

2025 - 2026 கல்வியாண்டிற்கான தரம் 12 உயர்தர தொழிற்கல்வி பிரிவுக்குச் சேர்வதற்கான விண்ணப்பங்களைக் கல்வி அமைச்சு கோரியுள்ளது.

இதன்படி, சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவம், விண்ணப்பிக்கக்கூடிய பாடசாலைகளின் பட்டியல் மற்றும் தொழிற்கல்வித் துறைகள் உள்ளிட்ட தகவல்கள் கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் சிறப்பு அறிவிப்புகளின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த நிலையில், கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் எந்தவொரு முடிவுகளும், இந்த மாணவர் சேர்ப்பின்போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக, மாணவர்களுக்கு 12 ஆம் வகுப்பில் சேரவும், தரம் 13 வரை பாடசாலைக் கல்வியைத் தொடரவும், உள்ளூர் மற்றும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்கல்வித் தகுதியைப் பெறவும் வாய்ப்பளிக்கப்படுவதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, 2024 - 2025 அல்லது கடந்த 2 ஆண்டுகளுக்குள் சாதாரண தரத் தேர்வுக்குத் தோற்றிய எந்தவொரு மாணவரும் தங்கள் பகுதியில் தொழிற்கல்வி பிரிவுள்ள பாடசாலைகளில் தரம் 12 இற்கு விண்ணப்பிக்கலாம் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த கற்கைகளில் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், வாகன தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம், சுகாதாரம் மற்றும் பராமரிப்பு சேவைகள், இரத்தினம் மற்றும் நகை தொழில்நுட்பம், அழகு கலாசாரம் உட்பட்ட பல்வேறு துறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (நி)

# அரச சொத்துக்களை ஒருபோதும் மோசடி செய்யவில்லை- நாமல்



(கொழும்பு)

அரச சொத்துக்களை நாங்கள் முறைகேடாக பயன்படுத்தவுமில்லை.மோசடி செய்யவுமில்லை. நீதிமன்ற கட்டமைப்பை அரசியல்மயப்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. நீதித்துறையின் மீது எமக்கு நம்பிக்கை உள்ளது. எமது தரப்பு நியாயத்தை குறிப்பிட்டு நீதியை பெற்றுக்கொள்வோம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை முன்னிலையானதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்குவதற்கு நல்லாட்சி அரசாங்கம் எடுத்த தீர்மானங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து வீதியில் இறங்கி போராடினோம். எம்முடன் மக்கள் விடுதலை முன்னணியினரும் அன்று வீதியில் இறங்கி போராடினார்கள்.

இந்த போராட்டத்தின் போது நாங்கள் கைது செய்யப்பட்டு சிறைக்கு சென்றோம். அந்த வழக்கு விசாரணைக்கு முன்னிலையாகாத காரணத்தால் தான் அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றம் என்னை கைது செய்வதற்கு கடந்த திங்கட்கிழமை பிடியாணை பிறப்பித்தது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தில் முன்னிலையாகி அந்த பிடியாணையை நீக்கிக் கொண்டேன்.

போராட்டங்களினால் நாட்டை அபிவிருத்தியடைய செய்ய முடியாது என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். கடந்த 75 ஆண்டுகாலமாக யார் போராட்டங்கள் மற்றும் வன்முறைகளில் ஈடுபட்டது. மக்கள் விடுதலை முன்னணி கடந்த 75 வருட காலமாக ஆட்சியில் இருந்த சகல அரசாங்கங்கள் முன்னெடுத்த அபிவிருத்திக்கு எதிராகவே போராடியது. அன்று போராடியது.இன்று ஏதும் தெரியாமல் தள்ளாடுகிறது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துடன் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 1 ஆண்டுகள் நிறைவடைகின்றன. இது வரையில் தொழிற்றுறையை விருத்தி செய்யும் எவ்வித திட்டங்களும் செயற்படுத்தப்படவில்லை.

இவ்வாறான நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் இலக்கிடப்பட்ட பொருளாதார வளர்ச்சியை எவ்வாறு அடைய முடியும் என தெரிவித்தார். (நி)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



Business Global International Award Organazations
சர்வதேச தொழில்சார் அனைத்துலக விருது வழங்கும் அமைப்பின்

விருது வழங்கும் நிகழ்வு
இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கேட்போர் கூடம்,
கொழும்பில் 26.07.2025 சனிக்கிழமை அன்று நடைபெற்ற
வேளை யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த பிரபல சமூக
சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய

கலாநிதி இராசையா குவேந்திரநாதன்

அவர்களின் தன்னலமற்ற சமய, சமூக பணிகளிற்காக

சமூக சேவைக்கான அதிஉயர் சாதனையாளர் விருது

வழங்கி கௌரவிக்கப்பட்டமையை நாமும்
பாராட்டுவதோடு அவரது சமூகசேவை மென்மேலும்
தொடர நாமும் வாழ்த்துகின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்
பெஷன் ஹவுஸ்
203, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(4933)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றங்களை திணைக்களங்கள் போல அணுகும் அரசு

## சுவிஸ் தூதுவரிடம் சுட்டிக்காட்டிய நிரோஷ்



உள்ளூராட்சி மன்றங்கள் அதிகார பகிர்விற்கான ஆட்சி முறை என்ற நிலையை ஏற்றுக் கொள்ளாது சாதாரண திணைக் களங்கள் போல் அணுகப்படும் நிலைமை காணப்படுகின்றது. உள்ளூராட்சி மன்றங்கள் மத்திய மற்றும் மாகாண கட்டமைப்பில் இருந்து அதிகாரங்களை நிலைநிறுத்துவது கடினமான விடயமாகவே உள்ளது என சுவிசர்லாந்து தூதுவருடனான சந்திப்பில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாக ராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் மாலை தீவுக்கான சுவிசர்லாந்து தூதுவர் கலாநிதி சிரி வோல்ட் தலைமையிலான குழுவினர் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்களை கடந்த செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணத்தில் சந்தித்து புதிதாக ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட தவிசாளர்களுடன் கலந்துரையாடினர். இச் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் மேலும், புதிதாக உள்ளூராட்சி மன்றங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் உள்ளூராட்சி மன்றங்களை அரசாங்கம் வலுப்படுத்தும் வகையில் சர்வதேச அனுபவங்களைப் பெற்று மத்திய அரசாங்கம் ஒத்துழைப்பினை வழங்கவேண்டும். இலங்கையில் குறிப்பாக வடக்குக் கிழக்கில் சாதாரணமான உள்ளூராட்சி மன்றங்களை ஒரு திணைக் களம் போன்றே மத்திய அரசாங்கத்தின் அணுகும் தன்மை காணப்படுகின்றது. இதற்குப் பின் அதிகாரங்களைப் பகிர மறுக்கும் மத்திய அரச கொள்கை நிகழ்ச்சி நிரல் உள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தியையும் மக்களின் அரசியல் அபிலாசைகளையும் நாம் சமமாகவே முன்கொண்டு செல்ல முயற்சிக்கின்றோம். இவ் விடயத்தில் உள்ளூராட்சியை பலப்படுத்த தங்களைப் போன்ற நாடுகளின் ஒத்துழைப்பு எமக்குத் தேவை. தமிழ் மக்களில் பெருமளவானோர் புலம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் ஊடான முதலீடுகளை பெற்று தொழில்துறை ரீதியிலான அபிவிருத்திகளை போரினால் பாதிக்கப்பட்ட எமது பகுதிகளில் மேற்கொள்ள வேண்டும். எனினும் அரசு தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கப்பட்ட இனப்படுகொலை உள்ளிட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறலையோ நீதியையோ நிலைநிறுத்தாமை காரணமாக புலம்பெயர் முதலீட்டாளர்கள் தாயகம் திரும்ப அஞ்சுகின்றனர்.

எமது மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பாரதூரமான மனித உரிமை மீறலுக்கு உள்நாட்டில் நீதியை ஒருபோதும் பெற்றுவிட முடியாது என்பதை கடந்த போருக்குப் பின்பான காலந்தாழ்த்தல்கள், அனுபவங்கள் வாயிலாக முடிவுசெய்துள்ளோம் என சுவிசர்லாந்து தூதுவருக்கும் தவிசாளர்களுக்குமான சந்திப்பில் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார். (க-8)

### லெஜெண்ட்ஸ் 20 ஓவர் லீக் தொடர்

# இந்தியா - பாகிஸ்தான் அரையிறுதியில் மோதுமா?




ஓய்வு பெற்ற கிரிக்கெட் வீரர்கள் பங்கேற்கும் 2ஆவது உலக சம்பியன்ஸ் ஓப் லெஜெண்ட்ஸ் 20 ஓவர் லீக் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. இதன் கடைசி லீக் போட்டியில் இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதின.

இதில் முதலில் விளையாடிய வெஸ்ட் இண்டீஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 111 ரன்கள் அடித்தது. இதனையடுத்து 145 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி 13.2 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 148 ரன்கள் அடித்து வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் புள்ளிப்பட்டியலில் 1 ஆம் இடம் பிடித்து அரையிறுதிக்கு இந்திய அணி தகுதி பெற்றுள்ளது.

அவ்வகையில் முதல் அரையிறுதி போட்டியில் இந்தியா பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன. 2 ஆவது அரையிறுதி போட்டியில் தென் ஆப்பிரிக்கா- அவுஸ்திரேலியா அணிகள் மோதுகின்றன.

முன்னதாக இந்த தொடரின் லீக் ஆட்டத்தில் இந்தியா- பாகிஸ்தான் அணிகள் மோதுவதாக இருந்தது. ஆனால் அப்போட்டியில் விளையாட இந்திய அணி வீரர்கள் மறுத்ததால் ஆட்டம் ரத்து செய்யப்பட்டது. ஆகவே அரையிறுதியில் பாகிஸ்தானுடன் இந்திய அணி விளையாடுமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3333

### மலர்





### தனுஷா




### விஷ்வா





### வினுஷா




### அனோஜி




### டிலக்சன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளகப் பொறிமுறைக்கு நீதியில்லை

# கோரிக்கையை புறந்தள்ளுகிறது ஐ.நா!

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம்

(வவுனியா)

**உள்ளக பொறிமுறையை நாம் தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றோம். எனினும் எமது கோரிக்கையை ஐ.நா மனித உரிமைகள் ஆணையகம் புறந்தள்ளுகிறது என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது.**

வவுனியா பழைய பேருந்து நிலையப்பகுதியில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளக பொறிமுறையை நாம் தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றோம். அப்பிடி இருந்த போதும் அதனையே மேற்கொள்ளுமாறு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஒரு இனப்படுகொலை இடம்பெற்ற நாட்டில் அதனை மேற்கொண்ட குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவதற்கு இந்த உள்ளக பொறிமுறை எப்படி சாத்தியமான முறையில் வழிவகுக்கும் என எமக்கு தெரியவில்லை.

இந்த நாட்டில் குற்றம் இழைத்தவர்களுக்கு உயர் பதவிகள் வழங்கி கௌரவிக்கும் நிலையே தொடர்ச்சியாக இருக்கின்றது.

அத்துடன் தாயக பகுதிகளில் தற்போது வெளிப்படும் மனித புதைகுழிகள் இங்கு இனப்படுகொலை நடந்துள்ளது என்பதை உணர்த்தி நிற்கின்றது.

இனப்படுகொலை நடந்துள்ளது என்பதற்கு சாட்சியமாகவே இந்த புதைகுழிகள் வெளிப்படுகின்றது. இவற்றை செய்தது யார் என்ற உண்மையை சர்வதேச விசாரணை ஒன்றின் மூலமே அறியமுடியும்.

தொடர்ச்சியாக நீதி கோரி போராடிவரும் நாம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் சர்வதேச விசாரணையினை வலியுறுத்தி வடகிழக்கு தழுவிய ரீதியில் மாபெரும் போராட்டம் ஒன்றையும் முன்னெடுக்கவுள்ளோம் என்று தெரிவித்துள்ளனர். (8)




# சீட் பெல்ட் சட்டங்கள் கடுமையாக்கப்படும்

## அமைச்சர் பிமல்

(கொழும்பு)

பேருந்துகளில் ஆசனப் பட்டி அணிவது தொடர்பான விதிமுறைகளை விரைவில் கடுமையாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இந்தச் சட்டத்தை பின்பற்றத் தவறும் பேருந்து சாரதிகள் உரிமங்கள் இரத்து செய்யப்படும் என்றும் அமைச்சர் எச்சரிக்கை விடுத்தார். காலி மாவட்ட போக்குவரத்துக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 2,350 பேர் வீதி விபத்துக்களில் இறக்கின்றனர், சுமார் 6,000 பேர் படுகாயமடைகிறார்கள்.

அதனால்தான் போக்குவரத்து அமைச்சு 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளுக்கான வீதி பாதுகாப்பு திட்டத்தை கடுமையாக அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், நாங்கள் சீட் பெல்ட் ஒழுங்கு முறையை விதிப்போம், தொடர்புடைய வர்த்தமானியை வெளியிடுவோம்.

2011 முதல் இந்தச் சட்டம் நடைமுறையில் இருந்தாலும், யாரும் இது தொடர்பில் கவனம் செலுத்துவதில்லை.

மக்கள் சீட் பெல்ட் அணியாமல் நெடுஞ்சாலைகளைப் பயன்படுத்துகிறார்கள்.

இந்த நிலையில், வருடாந்திர இறப்பு எண்ணிக்கையை 2,300 லிருந்து 2,000 இற்கும் குறைவாகக் குறைக்க இந்த நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டார். (ஙி)

### மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர்கள்

# கடமைகளை பொறுப்பேற்பு



(மன்னார்)

மன்னார் மாவட்டத்திற்கு நிர்வாகம் மற்றும் காணி விவகாரங்களுக்குப் பொறுப்பாக மேலதிக அரசாங்க அதிபர்கள் பொது நிர்வாக அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த இருவரும் நேற்று புதன்கிழமை காலை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் முன்னிலையில் தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டனர். மன்னார் பிரதேச செயலாளராக கடமையாற்றிய மனோகரன் பிரதீப் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் - நிர்வாகத்திற்கும், மடு பிரதேசச் செயலாளராக கடமையாற்றிய கீ.பீட் நிஜாகரன் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் - காணி பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். (8-285)

# இராசிபலன்

31.07.2025
ஆடி 15, வியாழக்கிழமை
சப்தமி பின்னிரவு 5.37 மணிவரை

சித்திரை பின்னிரவு 2.07 மணிவரை
சுப நேரம் 7.33-9.03 மணிவரை
இராகுகாலம் 1.33-3.03 மணிவரை

சந்திராஷ்டமம்:
பூரட்டாதி, உத்தரட்டாதி

**வளவன்**




நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.




இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.




திட்டமிடப்படாத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.




சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்திகரமானதாக அமையும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வருமானம் திருப்தி தரும்.




குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், செய்தொழிலில் உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், காரிய அனுகூலமுண்டு.




ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சுப செய்திகள் வந்து சேரலாம், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், உடல் நலனில் கவனம் தேவை.




முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம்.




பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள்.




தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பணியாளர் தொல்லை அகலும், குடும்ப மகிழ்ச்சி கூடும், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள்.




பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம்.




மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், பயணங்களால் மன உளைச்சல் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்.

**புரட்சிகள் எந்த நாளும் பின்னோக்கிச் செல்வதில்லை.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பறவைகள் தொடர்பில் நெடுந்தீவில் விழிப்புணர்வு



பறவைசார் சுற்றுலாத் துறையின் முக்கியத்துவம் மற்றும் ***indian courser*** பறவைகளின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

சி.சி.எச் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற குறித்த நிகழ்வினைத் தொடர்ந்து நெடுந்தீவு துறைமுகம், நெடுந்தீவு பிரதான வீதி, மற்றும் ***indian courser*** பறவைகள் அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் இவ் பறவைகளின் முக்கியத்துவம் பற்றிய பதாகைகளும் நாட்டப்பட்டிருந்தன.

மேற்குறித்த செயற்றிட்டத்திற்கான அனுசரணையினை டயலொக் நிறுவனம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-8)

## நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபமும் இணைந்து வழங்கும் 'தெய்வீக இசையரங்கு' இன்று வியாழக்கிழமை மாலை 6.45 மணிமுதல் 8.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் குழு இசையின் பாட்டு-கீதவாகினி இசைக்கல்லூரி மாணவர்கள், புல்லாங்குழல்-செல்வி.கனிகா பிரதீபன், மிருதங்கம்-கனகசபை சிவகுமார், தபேலா-கந்தசாமி டக்ஷயன், நெறியாள்கை-செல்வி பகீரதி சுப்ரமணியக் குருக்கள் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள குழலிசை நிகழ்வில் புல்லாங்குழல்-பத்மநாதன் பத்மராஜ், வயலின்-திருமதி.வனஜா ஈஸ்வரசர்மா, மிருதங்கம்-நித்தியானந்தன் மதிரூபன், தபேலா-கணேஸ்வரன் அகலிகன், முகர்சிங்-கந்தசாமி நந்தகுமார் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 250 | 250 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 400 | 300 | 300 |
| தக்காளி | 180 | 200 | 250 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 300 | 250 |
| கோவா | 250 | 250 | 400 | 250 | 300 |
| கரட் | 320 | 400 | 450 | 350 | 400 |
| பூசணி | 100 | 140 | 120 | 100 | 100 |
| புடோல் | 100 | 100 | 150 | 100 | 150 |
| வாழைக்காய் | 150 | 120 | 120 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 150-300 | 350 | 350 | 350 |
| பெரிய வெங்காயம் | 140 | 180 | 120 | 120 | 150 |
| பாகற்காய் | 300 | 350 | 450 | 500 | 500 |
| வெண்டக்காய் | 100 | 120 | 150 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 300 | 330 | 250 | 280 | 350 |
| பயற்றங்காய் | 200 | 250 | 300 | 300 | 200 |
| லீக்ஸ் | 300 | 300 | 350 | 250 | 300 |
| பீற்றூட் | 120 | 150 | 250 | 140 | 160 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 | 550 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 650 | 500 | 350 | 600 |
| போஞ்சி | 400 | 750 | 500 | 480 | 800 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 250 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 60-120 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 200 | 100 | 200 | 180 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 160 | 150 | 120-160 | 130-180 |
| இராசவள்ளி | 600 | 700 | 500 | 500 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 500 | 250 | 450 |
| முள்ளங்கி | 150 | 120 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 120 | 100 | 120 | 200 |

## சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடத்தும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தினம் நாளை 1 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் சைவ பரிபாலன சபை ஆச்சிரம மண்டபத்தில் சைவ பரிபாலன சபையின் நிர்வாக உறுப்பினர் செல்வி.நா.நீலாம்பிகை தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினாக யா/சன்மார்க்க மகா வித்தியாலய அதிபர் முருகையா ஶ்ரீதரன் கலந்து கொள்ளவுள்ளார். (8)

## யாழ்.மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தந்தை செல்வா கலை அரங்கில் இடம் பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி. சி.எஸ்.ஆர்.செல்வகுணாளன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பொறியியலாளரும் பாடசாலையின் பழைய மாணவருமான நாதன் நந்தகுமரன், சிறப்பு விருந்தினராக பட்டயக்கணக்காளரும் பழைய மாணவருமான தியாகராஜா வசீகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பரிசில்களை KDMG இடர்மேலாண்மை இயக்குநர் திருமதி சீதா வசீகரன் வழங்கி வைக்கவுள்ளனர். (ஜி-8)

### நல்லூரான் திருவடிக்கு...
### இன்று 3ஆம் நாள் திருவிழா



### கா! நல்லைக் குமரேசனே

பார்க்குமிட மெங்கணுமே ஆக்கமுற நின்றுலவும்
பல்கலைக் கலைஞன்நீயே!
நீரென்றும் நெருப்பென்றும் நிலவென்றும் கதிரென்றும்
நிழலாடி நிற்குமுருவே!
ஆருன்னை அன்போடு அழுதுதொழு தாலுமே
அரவணைத் தாளுந்திருவே!
காரென்று நீநின்று கருணைமழை பொழியவா
கலைநல்லைக் குமரேசனே!

**கலாபூஷணம்,**
**சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்.**

### நலம் காக்கும் நல்லூரவனே...

நல்லைப்பதியுறைந்து நலம் காக்கும் நாயகனே
சந்நிதியில் வந்துறங்கி உன் பதம் நாடும் அடியார்கள்
வெந்து மனம் உருகிக் கேட்கும் வரம் யாவும்
சிந்தை மகிழ்ந்துவந்து தந்திடுவாய் வேலவனே!

அந்திப் பொழுதெல்லாம் அயராது துதிபாடி
வந்துனது வாசலிலே மனதார உனை வேண்டி
சந்தத் தமிழாலே சொற்புனைந்து துதிபாடும்
சிந்தை மகிழ்ந்தோரை மகிழ்ந்து வந்து காத்திடையா

**பரமன் அருமை,**
**இணுவில்.**

### வேலவன் அருளாலே மேன்மையுறும்!

அலங்காரக் கந்தனுக்கு ஆடியில் திருவிழா!
அடியவர்கள் அனைவருக்கும் ஆனந்தப் பெருவிழா!
நலங் காக்கும் நாயகனே நமக்குத்துணை!
நமையாளும் அவன் அருளுக்கு ஏது இணை?

உலகெங்கும் இருந்து வரும் பக்தர் கூட்டம்!
உமை மைந்தன் புகழ் பாடி காவடி கரகாட்டம்!
மலர் தூவி வாழ்த்துரைப்பார் மகிழ்வு கொண்டு! எங்கள்
மயிலேறும் பெருமானின் வரவு கண்டு!

மங்கள மேளங்கள் முழங்கி வர,
மால் மருகன் திருப்புகழோ மனதுக்கு இனிமை தர
எங்கனும் திருமுருகன் திருநாமம் ஒலித்திடுமே!
எல்லோர்க்கும் மனங்களில் மகிழ்ச்சி பொங்கிடுமே!

வீதி உலா வருவான் திருமுருகன்! பக்தர்
வினைகளை வேரறுக்கும் அருட்குமரன்!
மேதினியும் அவன் வரவால் மகிமை பெறும்!
மேலவன் அருளாலே மேன்மை உறும்!

**கலாபூஷணம் கீழ்கரவை கி.குலசேகரன்**
**(ஓய்வு நிலை இலங்கை வங்கியாளர்)**
**டச் றோட் கோப்பாய் தெற்கு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**லங்கா மஹறால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(1379)

UK-1350, Australia-2050, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2480, France-2180

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

தொடர்புகளுக்கு

**077 839 3974, 076 889 1308**


## சென்ஜோன் அம்புலன்ஸ் படையணியின் முதலுதவி நிலையம்

(யாழ்ப்பாணம்)

சென்ஜோன் அம்புலன்ஸ் படையணியினரின் நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவகால முதலுதவி நிலையம் அரசடி வீதியில் நல்லை ஆதீன மணி மண்டபத்திற்கு அருகில் அமைந்துள்ளது என்பதனை பக்தர்கள், பொது மக்கள், சென்ஜோன் அம்புலன்ஸ் தொண்டர்கள் ஆகிய யாவருக்கும் அறியப்படுத்துவதாக அந்நிறுவனத்தின் யாழ்.மாவட்ட உதவி ஆணையாளர் சோ.ஈழத்தேசன் தெரிவித்துள்ளார். (8)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையின் பிரதி அதிபர்

திருமதி.**ருசானா வர்ஜீலியா பாலமுரளி**

(B.A, PGDE, PGDEM, M.Ed. SLTES III)

அவர்கள் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை III இற்கு பதவி உயர்வு பெற்றுள்ளார். அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல பதவியுயர்வுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.




ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை,
யாழ்ப்பாணம்.

(1380)

## இனியவாழ்வு இல்லம்
## Iniya vazhvu Illam

Regd.at NCPD No: MSEW/NSPD/2/10/R-202
Regd.at Div.SecNo:Mu/PKI/DS/VSSO/02

"A" Division
Thevipuram,
Puthukkudiyiruppu,
Srilanka

Tel: 021 2061 949
E.mail:iniyavazhvuillam1997@gmail.com
Web:WWW.INIYAVAZHVUIILAM,COM
Bank:BOC: 72966208

### உதவி முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

- ❖ வதிவிடம் :- வடமாகாணத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
- ❖ வயது :- 40-62 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- ❖ பால் :- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- ❖ கல்வித்தகைமை :- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- ❖ சேவை முன்அனுபவம் :- கல்விசார்ந்த துறைகளில் முன் அனுபவம் கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- ❖ ஒழுக்கம் :- நல்லொழுக்கம் கொண்டவராக இருக்கவேண்டும் என்பதுடன் நற்சான்று பத்திரம் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- ❖ கிராம சேவகரின் வதிவிட சான்றிதழ் இருத்தல் வேண்டும்.
- ❖ விண்ணப்ப முடிவுத்திகதி :- 12.08.2025

அனுப்பும் முகவரி :- தலைவர், பணிப்பாளர் சபை, இனிய வாழ்வு இல்லம், தேவிபுரம் "அ" பகுதி, புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் ஒப்படைக்கலாம்.

குறிப்பு :- கடித உறையின் இடதுபக்கத்தில் பதவியின் பெயரை குறிப்பிடவும்.

**"நிறைவேற்றுச் செயலணி
இனிய வாழ்வு இல்லம்"**

## சேவை நலன் பாராட்டு



உயர் திரு. **யோகானந்தம் – ஜெகஆனந்தம்** (SLPS-II, MEd)

### சேவை விபரம்

- யா/முருகவேள் வித்தியாலயம் எழுவைதீவு - ஆசிரியர் (20.01.1989 - 31.12.1990)
- பலாலி ஆசிரியர் கலாசாலை - பயிற்சி ஆசிரியர் (01.01.1991 - 31.12.1992)
- யா/புங்குடுதீவு சண்முகநாதன் வித்தியாலயம் - ஆசிரியர் (01.01.1993 - 31.12.1993)
- யா/ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி - ஆசிரியர் (01.01.1994 - 31.08.1995)
- யா/ நாரந்தனை கணேசா வித்தியாலயம் - ஆசிரியர் (01.09.1995 - 31.12.1995)
- மு/விசுவமடு மகா வித்தியாலயம் - ஆசிரியர் (01.01.1996 - 23.03.1998)
- யா/நாரந்தனை கணேசா வித்தியாலயம் - ஆசிரியர் (24.03.1998 - 31.08.1998)
- யா/கொக்குவில் இந்துக் கல்லூரி - ஆசிரியர் (01.09.1998 - 08.06.2010)
- யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் - ஆசிரியர் (09.06.2010 - 17.01.2011)
- யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை - ஆசிரியர் (18.01.2011 - 30.09.2012)
- யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை - அதிபர் சேவை (01.10.2012 - 02.01.2013)
- யா/ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம். - அதிபர் (03.01.2013 - 31.07.2025)

எமது வித்தியாலய அதிபர் உயர் திரு.**யோகானந்தம் ஜெகஆனந்தம்** அவர்கள் 37 வருட கல்விச் சேவையில் 13 ஆண்டுகள் அதிபராக எம்முடன் இணைந்து அளப்பரிய சேவையாற்றி தமது 58 ஆவது வயதில் 31.07.2025 இன்று ஓய்வு பெற்றுச் செல்கின்றார்.

அவருடைய ஓய்வுக் காலம் சீருடனும் சிறப்புடனும் அமைய வாழ்த்தி, எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*வாழ்த்துவோர்-*

பாடசாலைச் சமூகம்,
யா/ஆனைப்பந்தி மெதடிஸ்ற் மிஷன் வித்தியாலயம்.

(ச-3522)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## யாத்திரிகர்களுடன் சென்ற பேருந்து விபத்து!

### 18 பேர் உயிரிழப்பு



(டில்லி)

இந்தியாவின் ஜார்க் கண்டில் யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று சமையல் எரிவாயு சிலிண்டர்களை ஏற்றி வந்த லொறியுடன் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் 18 பேர் உயிரிழந்துள்ளதோடு மேலும் பலர் காயமடைந் துள்ளனர்.

பேருந்தில் சுமார் 35பேர் சென்றுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

இதேவேளை விபத்தில் காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவதற்கு பொலிஸார், மற்றும் அந்நாட்டு தேசிய பேரிடர் மீட்புப் படை ஆகியன இணைந்து உடனடி நட வடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை விபத்தில் காயமடைந்த சிலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்களின் அடையாளங்கள் தற்போது சரிபார்க்கப்பட்டு வருவதோடு மேலும் இறந்தவர்களின் உடல்கள் பிரேத பரிசோ தனைக்கு அனுப்பப்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

விபத்து இடம்பெற்ற மைக்கு சாரதியின் கவனயீனமே காரணம் என அதிகாரிகள் தெரிவித் துள்ளனர். (நி)

### அமெரிக்கா - ரஷ்ய எண்ணெய் விவகாரம்

## ட்ரம்பின் அறிவிப்பு

### உலக நாடுகள் அதிர்ச்சி




(வோஷிங்டன்)

ரஷ்யா - உக்ரைன் இடையேயான போர் நீடித்து வரும் நிலையில் , ரஷ்ய எண்ணெய் இறக்குமதி யாளர்களுக்கு 100% இரண்டாம் நிலை வரிகள் விதிக்கப்படுமென்பதை அறி வித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி யின் இந்த அறிவிப்பு உலக எண்ணெய் சந்தையில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள் ளது.

இரண்டாம் நிலை வரிகள் என்பது, அமெரிக்க அரசு ரஷ்யாவுடன் வியா பாரம் செய்யும் மற்ற நாடுகளின் பொருட்கள் மற்றும் வர்த்தகத்தையும் தடுக்கும் வகையில் விதிக் கும் புதிய வரிகளாகும். இத னால், ரஷ்யாவுடன் வியா பாரம் செய்யும் நாடுகள் அதிர்சியடைந்துள்ளன.

இந்த அறிவிப்பால் இந் தியா மற்றும் சீனா போன்ற ரஷ்ய எண்ணெய் அதிகள வில் இறக்குமதி செய்யும் நாடுகள் அதிர்ச்சியடைந் துள்ளன. அமெரிக்காவின் வரிகள் அமுல்படுத்தப்பட் டால், உலகளவில் எண் ணெய் விலைகள் அதிக ரிக்க வாய்ப்பு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ரஷ்யாவில் சக்திவாய்ந்த


## ➤ குலுங்கிய கட்டடங்

## ➤ 13 அடி உயரத்தில் எழுந்த

## ➤ பீதியில் மக்கள்

**(மொஸ்கோ)**

**ரஷ்யாவில் நேற்றுக் காலை 8.7 என்ற ரிக்டர் அளவில் மிகவும் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட் டுள்ளது. இந்தப் பயங்கர நில நடுக்கத்தால் சுனாமி எச்சரிக்கை யும் விடுக்கப்பட்டுள்ளது. இதனால், அப்பகுதி மக்கள் கடும் அச்சத்தில் உள்ளனர்.**



13 அடி உயரத்தில் சுனாமி அலைகள் ஏற்பட்ட தால், சுனாமி எச்சரிக்கை யும் விடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, அங்கு வசித்துவரும் மக்கள் கடும் பீதியடைந்துள்ள னர்.

இந்த பலத்த நில நடுக்கத்தால் கட்டடங்கள் பயங்கர சேதமடைந்தன. அச்சத்தில் மக்கள் அலறி அடித்துக் கொண்டு ஓடி னர்.

இந்தநிலையில், அங்கு வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்றும் பணி நடந்து வருகிறது. அப்பகுதியில் உள்ள மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அதிகாரிகள் விரைவாக செயற்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...த நிலநடுக்கம்!

### ...ங்கள்

### ...த சுனாமி அலைகள்



வருகின்றனர்.

அதிகாரிகள் குடியிருப்பாளர்கள் விழிப்புடன் இருக்கவும், அனைத்து அவசர வழிமுறைகளையும் பின்பற்றவும் என வலியுறுத்தினர். இதனால், அமெரிக்கா, ஜப்பான் மற்றும் அருகிலுள்ள பிற நாடுகளுக்கும் சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் இதுகுறித்து தெரிவிக்கையில், இந்த நிலநடுக்கம் 19.3 கிலோமீற்றர் (12 மைல்) ஆழத்தில் ஏற்பட்டதாகவும், அவாச்சா விரிகுடாவில் சுமார் 1,65,000 மக்கள்தொகை கொண்ட கடலோர நகரமான பெட்ரோபாவ்லோவ்ஸ்க் - கம்சாட்ஸ்கியிலிருந்து கிழக்கு-தென்கிழக்கில் சுமார் 125 கிலோமீற்றர் (80 மைல்) தொலைவில் மையம் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் வானிலை ஆய்வு நிறுவனம், முதற்கட்டமாக 8.0 ரிக்டர் அளவில் பதிவாகியதாகவும் தெரிவித்துள்ளது. ஜப்பானின் பசுபிக் கடற்கரையில் 1 மீற்றர் வரை சுனாமி ஏற்பட வாய்ப்புள்ளதாக அது எச்சரிக்கை விடுத்துள்ளது.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து, கம்சட்கா பிராந்தியத்தின் சில பகுதிகளில் 3 முதல் 4 மீற்றர் உயர அலைகளுடன் சுனாமி ஏற்பட்டதாக ரஷ்யாவின் அவசரகால சூழ்நிலைகளுக்கான பிராந்திய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தென் கொரியா, வட கொரியா மற்றும் தைவான் கடற்கரைகளில் சிறிய சுனாமி அலைகள் - அலை மட்டத்திலிருந்து 0.3 மீற்றருக்கும் (சுமார் 1 அடி) ஏற்பட கூடும் என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இது 2022 ஆம் ஆண்டுக்குப் பிறகு 8.0 இற்கு ரிக்டர் அளவிற்கு மேல் பதிவான முதல் நிலநடுக்கம் மற்றும் 2011 இற்குப் பிறகு ஏற்பட்ட மிக வலிமையான நிலநடுக்கம் இதுவாகும். (நி)

## எதிர்காலத்தில் பாலஸ்தீன அரசை அங்கீகரிக்க நேரிடலாம்

### இஸ்ரேலுக்கு பிரிட்டிஸ் பிரதமர் எச்சரிக்கை




(லண்டன்)

காசாவில் நிலவும் பயங்கரமான சூழ்நிலையை முடிவுக்குக் கொண்டுவர இஸ்ரேல் கணிசமான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் செப்டெம்பர் மாதத்தில் இங்கிலாந்து பாலஸ்தீன அரசை அங்கீகரிக்கும் என்று பிரிட்டிஸ் பிரதமர் கெய்ர் ஸ்டாமெர் தெரிவித்துள்ளார்.

யுத்தநிறுத்தம், இரண்டு தேசத்தினை உறுதி செய்யும் நீண்டகால தீர்விற்கு அர்ப்பணித்தல், ஐக்கியநாடுகள் காசாவில் மீண்டும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு அனுமதித்தல் போன்ற நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ள பிரிட்டிஸ் பிரதமர் இல்லாவிட்டால் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் அமர்வில் பிரிட்டன் நடவடிக்கை எடுக்கும் என தெரிவித்துள்ளார்.

காசாவில் காணப்படும் சகிக்கமுடியாத நிலைமை காரணமாகவும், இரண்டு தேசத்திற்கான வாய்ப்புகள் குறைவடைகின்றன என்ற கரிசனை காரணமாகவும் இந்த நடவடிக்கைகளை அறிவிப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (நி)

## ஒரே கல்லூரியில் 800 மாணவர்களுக்கு எச்.ஐ.வி தொற்று



(டில்லி)

இந்தியாவின் திரிபுரா மாநிலத்தில் பாடசாலை மற்றும் கல்லூரி மாணவர்களிடையே எய்ட்ஸ் தொற்று பரவியிருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

திரிபுரா மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தின் அறிக்கையின்படி, 828 மாணவர்கள் எய்ட்ஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர், இதில் 47 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த பரவலுக்கு முக்கிய காரணமாக போதைப் பொருள் பயன்பாடு, குறிப்பாக ஒரே ஊசியைப் பகிர்ந்து கொண்டு போதைப் பொருளை செலுத்தியது கண்டறியப்பட்டுள்ளது.

சமீப காலமாக திரிபுராவில் போதைப் பொருள் பயன்பாடு அதிகரித்து வருவதாக குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில், பாடசாலை மற்றும் கல்லூரி மாணவர்களிடையே நடத்தப்பட்ட சோதனைகளில் இந்த அதிர்ச்சிகரமான உண்மை வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

மாநிலத்தில் உள்ள 220 பாடசாலைகள் மற்றும் 24 கல்லூரிகளில் மாணவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக, பணக்கார குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் இதில் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெற்றோர்கள், பெரும்பாலும் அரசு வேலையில் இருப்பவர்கள், தங்கள் பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்தியதால், போதைப் பழக்கத்தை கண்டறிவதில் தாமதமாகியுள்ளது.

அதிகாரிகளின் கூற்றுப்படி, மாணவர்கள் ஒரே ஊசியைப் பயன்படுத்தி போதைப்பொருளை செலுத்தியதே எய்ட்ஸ் தொற்று பரவ முக்கிய காரணமாகும்.

இதனால், ஒரே நேரத்தில் 828 மாணவர்களுக்கு தொற்று பரவியுள்ளது. தற்போது 572 மாணவர்கள் உயிருடன் இருக்கின்றனர், ஆனால் 47 பேர் தொற்றின் தீவிரத்தால் உயிரிழந்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாட்ஸ்அப் மோசடி எச்சரிக்கும் பொலிஸார்

(கொழும்பு)

நிதி மோசடி செய்வதற்காக வாட்ஸ்அப் கணக்குகளை அங்கீகரிக்கப்படாத முறையில் அணுகுவது குறித்து இலங்கை பொலிஸார் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மோசடி செய்பவர்கள் வாட்ஸ்அப் தளத்தைப் பயன்படுத்தி போலி செய்திகள் மற்றும் இணைப்புகளை அனுப்பி, பயனர்களின் தனிப்பட்ட கணக்குகளில் அங்கீகரிக்கப்படாத அணுகலைப் பெற்று நிதி மோசடி செய்யும் சம்பவங்கள் அதிகரித்து வருவதைக் குற்றப் புலனாய்வுத் துறை கண்டறிந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



இதுபோன்ற சந்தர்ப்பங்களில், மோசடி செய்பவர்கள் பயனரிடமிருந்து வாட்ஸ்அப் ஓடிபி (ஒருமுறை கடவுச்சொல்) பெற்று கணக்கைக் கட்டுப்படுத்துகிறார்கள்.

பின்னர், அவர்கள் திருடப்பட்ட கணக்கைப் பயன்படுத்தி பயனரின் தொடர்புகளுக்கு போலி செய்திகளை அனுப்பி, மோசடியை மேலும் தொடர்கின்றனர்.

இது பாதிக்கப்பட்டவர்களுக்கு குறிப்பிடத்தக்க நிதி இழப்புகளுக்கு வழி வகுத்துள்ளது.

இதுபோன்ற மோசடி நடவடிக்கைகள் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்கவும், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

மேலும், தங்கள் ஓடிபி இலக்கங்களை யாருடனும் பகிர்ந்துகொள்ள வேண்டாம் என்றும், ஏனெனில் இது அவர்களின் கணக்குகளை அங்கீகரிக்கப்படாத அணுகலுக்கு வழிவகுக்கும் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1993- இந்து<br>நட்சத்திரம்:மூலம்<br>2இல்செவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L,Business, Driver<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15899 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>11இல்சூரிசெவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: Diploma,படவரைஞர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/15898 |
| பிறப்பு:1993-இந்து<br>நட்சத்திரம்:மகம்<br>உயரம்:5'5"<br>கி-பா-5 1/2<br>தகைமை/தொழில்-A/L,Police<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/13361 | பிறப்பு-2001-இந்து<br>நட்சத்திரம்-அனுசம்<br>கி-பா- 17 1/2<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Pharmacist Course, pvt work<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/15900 |
| பிறப்பு:1987-இந்து<br>நட்சத்திரம்-ஆயிலியம்<br>கி-பா-27<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்:BA,MA,Information Assistant<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/14962 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>கி.பா:17<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: G/12110 |
| பிறப்பு: 1980- இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்-A/L,Salesman<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண். விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: B/14907 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>கி.பா:14 1/2<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc, Researcher (NGO)<br>எதிர்பார்ப்பு:அரச/தனியார் உத்தியோகம்.<br>தொ.இ: G/12936 |
| பிறப்பு: 1988- இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>கி-பா-80<br>8இல் செவ்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: IT, Engineer (Australia)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14945 | பிறப்பு -1991 -இந்து<br>நட்சத்திரம் - சுவாதி<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BA, Teacher<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/15242 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 421



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# குரு கேட்ட தட்சணை!

ஒரே ஒரு ஊரிலே, ஒரே ஒரு ராஜா!

அந்த ராஜாவுக்கு, ஒரே ஒரு கவலை!

அவருக்கிருக்கின்ற ஒரே பிள்ளை சரியாக படிக்காமல் ஊர் சுற்றிக்கொண்டிருந்தான் என்ற கவலைதான்!

ராஜா கவலையாக இருப்பதைப் பார்த்து விட்டு மந்திரி வந்தார்.

"அரசே நம் இளவரசரை பக்கத்திலே இருக்கின்ற காட்டுக்கு அனுப்பி அங்கேயிருக்கின்ற முனிவரிடம் கொஞ்சநாள் பாடம் படித்துவிட்டு வருவதற்கு ஏற்பாடு செய்தால் இவர் புத்திசாலியாக ஆகிவிடுவார் என்று நினைக்கிறேன்!" என்றார். ராஜாவுக்கும் இந்த யோசனை "சரி" என்று பட்டது.

உடனே இளவரசனை அழைத்துக்கொண்டு அந்த முனிவர் இருக்கின்ற ஆசிரமத்துக்குப் போனார். அங்கே ஒரு மரத்தடியிலே உட்கார்ந்துகொண்டு அந்த முனிவர் தன்னுடைய சீடர்களுக்குப் பாடம் நடத்திக்கொண்டிருந்தார். சொல்லிக்கொடுப்பதிலேயே கவனமாக இருந்தார். அதனாலே பக்கத்திலே வந்து நின்று கொண்டிருக்கின்ற ராஜாவை அவர் கவனிக்கவில்லை! இது ராஜாவுக்கு ரொம்ப அவமானமாக போய்விட்டுது! ஆத்திரம் தலைக்கு ஏறிப்போனது! உடம்பு துடித்தது!

இருந்தாலும் மகனை அவரிடம் சேர்க்க வேண்டுமே என்பதற்காக பொறுத்துக் கொண்டார். பல்லைக் கடித்துக் கொண்டு இருந்தார். கோபத்தை வெளியிலே காட்டிக் கொள்ளவில்லை! கொஞ்சநேரம் கழித்து முனிவர் நிமிர்ந்து பார்த்தார். ராஜா விடயத்தைச் சொன்னார். சரி என்று இளவரசனை தன்னுடைய சீடனாக சேர்த்துக் கொண்டார் அந்த முனிவர்.

அவனுக்கு பாடம் சொல்லி கொடுக்க ஆரம்பித்தார் ராஜா பையனை சேர்த்து விட்டு திரும்பிப் போய்விட்டார்.

பல வருடங்கள் ஆனது! அரண்மனைக்குத் திரும்பும் நேரம் வந்தது. நேராக இளவரசன் படிக்க வேண்டியதெல்லாம் படித்த "குரு" விடம் போனான். "குரு தட்சணை"யை அவர் பாதத்திலே வைத்தான். வணங்கினான். குரு நிமிர்ந்து பார்த்தார். "இப்ப குரு தட்சணை எதுவும் எனக்குத் தேவை இல்லை இதை திருப்பி எடுத்துக்கொள் நான் கேட்கும்போது கொடுத்தால் போதும்!" என்று விட்டார். குரு பேச்சுக்கு மறுபேச்சு பேசலாமா? இளவரசன் பேசாமல் திரும்பி வந்து விட்டான்.

இளவரசன் புத்திசாலியாக திரும்பி வந்ததிலே அந்த ராஜாவுக்கு ரொம்ப சந்தோஷம். இருந்தாலும் அந்த முனிவர் ஆரம்பத்திலே தன்னை அலட்சியப்படுத்தினார் என்பதை ராஜா மறக்கவில்லை. அந்த கோபத்தை இப்போது காட்டினார். படைவீரர்களைக் காட்டுக்கு அனுப்பி அந்த ஆசிரமத்தை சூறையாடச் சொன்னார். அவ்வளவுதான். இவர்கள் போய் அடித்து நொறுக்கி விட்டு வந்துவிட்டார்கள். இது இளவரசனுக்குத் தெரியாது!

கொஞ்ச காலம் கழித்து இளவரசன் தன்னுடைய குருவை பார்ப்பதற்காக காட்டுக்குப் போனான். அங்கே போய் பார்த்தால் குருவையும் காணவில்லை. ஆசிரமத்தையும் காணவில்லை காடு பூரா அலைந்து திரிந்தான்.

கடைசியிலே ஒரு ஆற்றங்கரையிலே அந்த குருவோட ஆசிரமம் தெரிந்தது. ஓடிப்போய் குருவை வணங்கினான். அவர் பாதத்திலே "குருதட்சணை"யை வைத்தான். இப்பவும் முனிவர் அதைத் தொடவில்லை. தேவைப்படும் போது வாங்குகிறேன் என்று சொல்லிவிட்டார்.

சரி என்று சொல்லி விட்டு இளவரசன் புறப்பட்டான். ஆசிரமத்திற்கு வெளியிலே சில சீடர்கள் கசமுசான்னு இவனை சுட்டிக்காட்டி என்னமோ பேசிக்கொண்டிருந்தார்கள். கொஞ்சம் உற்று கவனித்துக் கேட்டான்.

தன்னுடைய குருவின் ஆசிரமத்தை அழித்தது தன்னுடைய தந்தைதான் என்ற விபரத்தை புரிந்துகொண்டான். அவ்வளவுதான். கோபம் வந்து விட்டது.

"இப்பவே போய் என் தந்தையின் தலையை வெட்டி கொண்டு வந்து என் குருவின் பாதத்திலே வைக்கிறேன் பார்!"என்று கத்தினான். வெறியோடு வாளை உருவிக்கொண்டுப் புறப்பட்டான். சீடர்கள் ஓடிப்போய் "குரு"விடம் விடயத்தைச் சொன்னார்கள்.

"ஓடிப்போய் இளவரசனைத் தடுத்து, இங்கே அழைத்துக்கொண்டு வாருங்கள்!"என்றார் குரு. அழைத்துக்கொண்டு வந்தார்கள். இளவரசன் கோபத்தோடு வந்தான். முனிவர் அவனைப் பார்த்தார்.

"இப்ப எனக்கு குருதட்சணை வேண்டும்" என்றார். "என்ன வேண்டும்"? என்று கேட்டான் இளவரசன்.

"கோபம்!" என்றார் குரு. "உன்கிட்டே இப்ப இருக்கின்ற கோபத்தை எனக்கு குருதட்சணையாக கொடு!" என்றார்.

இளவரசன் தலையை குனிந்துக்கொண்டு நின்றான். அவர் முன்னாடி பிறகு திரும்பி அரண்மனைக்குப் போனான். இங்கே நடந்தது எல்லாம் அங்கே ராஜாவுக்குத் தெரிந்தது. அவரும் ஓடிவந்து முனிவர் காலிலே விழுந்து மன்னிப்பு கேட்டார். இது ஒரு கதை.

நம்மிடம் உதவி பெற்று பயனடைந்தவர்களே தமக்குக் கெடுதல் செய்ய நினைப்பது உண்டு. அவங்களையும் நம்முடைய பண்பினாலே வெற்றி கொள்ள முடியும் என்பது இந்தக் கதையோட கருத்து.

இந்தக் காலத்திலே பையன் ஒருவன். ஒரு வாத்தியாரிடம் நல்ல பண்புகளைக் கற்கப் போனான். ஒரு வெள்ளிக் குத்துவிளக்கை அவருக்கு முன்னாடி குருதட்சணையாக வைத்தான். சார் இதை குருதட்சணையாக ஏற்றுக்கொண்டு நீங்கள் எனக்கு சில நல்ல பழக்கவழக்கங்களை சொல்லிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். வாத்தியார் நிமிர்ந்து பார்த்தார். "உனக்கு இனிமே சொல்லிக்கொடுக்க வேண்டிய அவசியம் இல்லைப்பா, நீ நல்லவனாக ஆகி விட்டாய்! இப்ப என் மனம் நிறைந்து இருக்கு"என்றார்.

"ஏன் அப்படி சொல்கிறீர்கள்?" என்றான் பையன். "இந்த குத்துவிளக்கு போனவாரம் எங்கள் வீட்டிலே திருட்டுப் போனதுதான்!" என்றார் வாத்தியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளி சிறுவர்களுக்கு சத்துணவுத் திட்டம் ஆரம்பம்

## வலி.தென்மேற்கில் தீர்மானமாக நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளிச் சிறார்களுக்கு 65 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் சத்துணவு வழங்கும் திட்டம் தீர்மானமாக நிறைவேற்றப் பட்டுள்ளது.

வலி தென்மேற்கு பிரதேச சபையின் அமர்வு கடந்த வாரம் தவிசாளர் ஜெசீதன் தலைமையில் நடைபெற்றது.

குறித்த கூட்டத் தொடரிலேயே மேற்குறித்த திட்டத்திற்கான அனுமதி தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,தவிசாளர் ஜெசீதனினால் முன்பள்ளிச் சிறார்களுக்கான சத்துணவுத் திட்டம் தொடர்பில் பேசியிருந்த போதும் சபையில்,மேற்குறித்த திட்டம் தொடர்பில் எவரும் அக்கறை காட்டவில்லை.



இருப்பினும் தவிசாளர் தொடர்ந்து சிறார்களுக்கான சத்துணவின் முக்கியத்துவம் தொடர்பில் விளக்கமளித்ததன் பின்னர் அனைவரும் குறித்த திட்டத்தை ஏற்றுக் கொண்டு அத்திட்டத்தை அமுல்படுத்தும் முகமாக தீர்மானமாக நிறைவேற்றினர்.

சத்துணவு வழங்கும் இத்திட்டம் மிக விரைவாக செயற்படுத்தப் பட்டிருப்பதாகவும் தொடர்ச்சியாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் ஏனைய சபைகளும் சிறுவர் சத்துணவுத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்றும் வலி. தென் மேற்கு பிரதேச சபை தவிசாளர் சுட்டிக்காட்டினார். (க-8)

# ஸ்ரீமத் முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் குரு பூசை இன்று

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வ சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஏற்பாட்டில் ஸ்ரீமத் முத்துக்குமாரு மயில்வாகம் சுவாமிகளின் 40 ஆம் ஆண்டு குரு பூசை தினம் இன்று வியாழக்கிழமை காலை ஸ்ரீ செல்வ சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் "குருவாய் வருவாய்" எனும் தலைப்பில் ஆசிரியர் துரை. கணேசமூர்த்தி அவர்கள் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

இந் நிகழ்வில் சுவாமியின் அன்பர்கள், அடியவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-8)

# கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் சிறுவர் பூங்கா திறந்து வைப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலக வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

மாவட்ட செயலகத்திற்கு பெற்றோர்களோடு வருகை தரும் சிறுவர், சிறுமிகளின் நன்மை கருதி குறித்த சிறுவர் பூங்கா திறந்து வைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ் - கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், World Vision நிறுவனத்தின் கரைச்சி, கண்டாவளை பிரதேச திட்ட முகாமையாளர் மக்டலின் குயிண்டஸ் ஆகியோர் கலந்து கொண்டு இதனை திறந்து வைத்தனர்.

கிளிநொச்சி மாவட்ட செயலகம் மற்றும் World Vision நிறுவனத்தின் பங்களிப்புடன் இந்த சிறுவர் பூங்கா நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இவ் அழகிய பூங்கா சிறுவர்களை மகிழ்வூட்டவும் சிந்திக்கவும், அவர்களது உடல், மன அசதியைப் போக்க ஊஞ்சல், சறுக்கல்கள், இராட்டினம், சாய்பலகை, சிறு விளையாட்டு இல்லம் போன்றன பெரிதும் மகிழ்ச்சியூட்டுகின்றன.

மேலும், மாவட்ட செயலக சிறுவர், பெண்கள் பிரிவிற்கு வருகை தருபவர்களுக்கு உளவள ஆற்றுப்படுத்தும் இடமும் அமைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர்(காணி), மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (8)

# பருத்தித்துறை பிரதேச சபை அமர்வில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றம்



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைப் பிரதேச சபையின் அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை தவிசாளர் உதயகுமார் யுகதீஸ் தலைமையில் நடைபெற்றது.

குறித்த அமர்வில் பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட பல்வேறு பிரச்சினைகள் ஆராயப்பட்டிருந்தன.

இவற்றில் தவிசாளர் யுகதீஸ் அவர்களால் நான்கு விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டு அவை, அனைத்துப் பிரதேச சபை உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

இதில் முதலாவதாக, பருத்தித்துறைப் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் நடைபெறும் சட்ட விரோத மணல் அகழ்வு உடன் நிறுத்தப்படவேண்டும் எனத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து,

நல்லூர்ஆலய சூழலுக்கு மணல் மண் வழங்குவது தொடர்பாக பேசப்பட்டது. வருடாந்தம் 120 லோட் மணல் மண் ஆலய சூழலுக்கு வழங்கப்படுவதனால் எமது பிரதேசம் நீரில் மூழ்கும் அபாயத்தில் உள்ளது.

எனவே இம்முறை வழங்கப்பட்ட மணலைத் தொடர்ந்து பாதுகாப்பாகப் பயன்படுத்துமாறு கோரி யாழ். மாநகர ஆணையர் மற்றும் இவற்றுடன் தொடர்புடையவர்களுக்கு கடிதம் அனுப்புவதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மற்றும் பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட கடலில் சட்ட விரோத மீன்பிடியைக் கட்டுப்படுத்தல்.

பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட அரச, தனியார் காணிகளை கையகப்படுத்தி வைத்திருக்கும் வன ஜீவராசிகள் திணைக்களம், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், வனப்பாதுகாப்புத்திணைக்களம் போன்றன உடன் மக்கள் காணிகளை விடுவிக்க வேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. (க-8)

# நெல் அறுவடை விழா

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் பரசூட் முறை மாதிரி நெல் விதைப்பு செயற்றிட்டத்தில், வெற்றிகரமான விளைச்சல் பெறப்பட்டுள்ளது.

பாரம்பரிய நெல் விதைப்பிற்கு பதிலாக, நிலம் முறையாக தயாரிக்கப்பட்டு, பரசூட் முறையைப் பயன்படுத்தி நெல் நாற்றுக்கள் நடப்பட்டன.

விவசாயிகளை குறித்த பரசூட் முறையைப் பயன்படுத்த ஊக்குவிக்கும் நோக்கில் வவுனியாவின் தாண்டிக்குளம் பகுதியில் நடத்தப்பட்ட 60 ஏக்கர் மாதிரி விளைச்சல் மிகவும் வெற்றிகரமாக அமைந்தது.

இந்த மாதிரி விளைச்சலின் நெல் அறுவடை வவுனியா மாவட்ட செயலாளர் பி.ஏ. சரத்சந்திர தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

சுமார் 60 ஏக்கரில் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பரசூட் முறையில் மேற்கொள்ளப்பட்ட நெல் சாகுபடியிலிருந்து நெல் அறுவடை இரட்டிப்பாகியுள்ளது என்றும், இந்த முறையைப் பயன்படுத்த அதிக விவசாயிகளை ஊக்குவிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட செயலாளர் இதன் போது தெரிவித்தார். இந் நெல் அறுவடை நிகழ்வில் மேலதிக மாவட்ட செயலாளர் நா. கமலதாசன், விவசாய திணைக்கள அதிகாரிகள் குழுவும் பங்கேற்றிருந்தனர். (8)

# இலங்கைக்கு கடத்த முயன்ற பீடி இலைப் பொதிகள் பறிமுதல்

(மன்னார்)

இலங்கைக்குக் கடத்துவதற்காக கொண்டுவரப்பட்ட 2250 கிலோ பீடி இலைகள் கொண்ட பொதிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இராமநாதபுரம் அடுத்த வெள்ளரி ஓடை கடற்கரையில் இருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக லொறியில் கொண்டுவரப்பட்ட பீடி இலை பொதிகளை கியூ பிரிவு பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர். இராமநாதபுரம் அடுத்த வெள்ளரி ஓடை கடற்கரையிலிருந்து இலங்கைக்கு பீடி இலைகள் கொண்ட பொதிகள் கடல் வழியாக சட்டவிரோதமான முறையில் கடத்த இருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் கியூ பிரிவு பொலிஸார் திடீர் ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அதன்போதே லொறி ஒன்றிலிருந்து இலங்கைக்கு பீடி இலை பொதிகளை படகில் ஏற்றிக் கொண்டிருந்தபோது, பொலிஸார் அவர்களை மடக்கிப்பிடிக்க முயன்றபோது படகில் இருந்த இருவர் 10 மூட்டை பீடி இலை பொதிகளுடன் கடல் வழியாக தப்பித்துச் சென்றுள்ளனர்.

மேலும் பீடி இலை ஏற்றி வந்த லொறியை பறிமுதல் செய்த பொலிஸார் இச்சம்பவத்தில் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் வெள்ளரி ஓடைப் பகுதியைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்து இராமநாதபுரம் சுங்கத் துறை அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

இராமநாதபுரம் மாவட்டம் இலங்கைக்கு மிக அருகில் இருப்பதால் இராமநாதபுரம் மாவட்ட கடற்கரையில் இருந்து சமையல் மஞ்சள், சுக்கு, கஞ்சா, கடல் அட்டைகள், பீடி இலை உள்ளிட்டவைகள் அதிக அளவு இலங்கைக்கு கடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-285)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர் 834



ஒத்த உணர்ச்சியுள்ள அவர்களுடைய உள்ளங்கள் ஒன்றுக்கொன்று அவ்விதம் அமைதியை அளிப்பதுண்டு. ஆனால் இம்முறை பூங்குழலியின் மனத்தில் அத்தகைய நிம்மதி ஏற்படவில்லை.

சில நாளைக்கு முன்பு அதே இடத்தில் பொன்னியின் செல்வனை உணர்வு இழந்திருந்த நிலையில் அழைத்து போனது அவளுக்கு அடிக்கடி நினைவு வந்தது. அந்த இராஜகுமாரனை இன்னொரு இராஜகுமாரியிடம் சேர்ப்பிப்பதற்காகவே தான் அத்தனை கஷ்டத்திற்கு உள்ளானதை எண்ணியபோது அவளுடைய இதயத்தில் 'சுருக்'கென்ற வேதனை ஏற்பட்டது.

சேந்தன் அமுதனை "ஊருக்குப் போ" என்று பிடித்துத் தள்ளியது போல் அனுப்பி விட்டதை எண்ணிய போது அவள் உள்ளம் இரங்கியது.

இந்த எண்ணங்களைத் தவிர, அன்று அவளுடைய தந்தை தியாக விடங்கக்கரையர் செய்த எச்சரிக்கை அடிக்கடி நினைவுக்கு வந்து கொண்டிருந்தது.

"குழந்தாய்! உன்னுடைய போக்குவரத்துக்களைக் கொஞ்சம் கட்டுப்படுத்திக் கொண்டால் நன்றாயிருக்கும். யார் யாரோ புதுப் புது மனிதர்கள் இங்கே வந்து கொண்டிருக்கிறார்கள். எதற்காக வருகிறார்கள் என்று தெரியவில்லை. இராஜ்யத்தில் ஏதேதோ சதிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

அவற்றில் நீ அகப்பட்டுக் கொள்ளாதே! நம்முடைய குடும்பம் என்றென்றைக்கும் சோழ குலத்து மன்னர் குடும்பத்துக்குக் கடமைப்பட்டது! இதை மறந்து விடாதே!" என்று அவளுடைய தந்தை கூறினார்.

தந்தையின் எச்சரிக்கையோடு அண்ணியின் இரகசிய நடவடிக்கைகளையும் சேர்த்து எண்ணியபோது பூங்குழலிக்கு என்றுமில்லாத திகில் உண்டாயிற்று. 'ஒருவேளை அந்தப் புது மனிதர்கள் தன்னைத் தேடிக் கொண்டுதான் வந்திருப்பார்களோ? தன்னைத் தொடர்வதின் மூலம் பொன்னியின் செல்வன் இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்க முயல்வார்களோ? தன் மூலமாக அது வெளிப்பட்டால் எவ்வளவு பெரிய குற்றமாக முடியும்?'

பூங்குழலியின் மனக் கலக்கத்தை அதிகமாக்கக் கூடிய விதமாக ஓடையின் கரையோரமாகக் காடுகளில் சலசலப்புச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன. அப்போது காற்றே அடிக்கவில்லை. எட்டுத் திசைகளும் சதி செய்து கொண்டு காற்றைப் பிடித்துத் தடுத்து வைத்திருப்பது போல் இருந்தது. அப்படியிருக்கும் போது ஓடைக்கரைக் காடுகளில் சலசலப்பு ஏற்படக் காரணம் என்ன? ஊமை ராணிக்கு இந்தத் தொந்தரவு ஒன்றுமில்லை. அவளுக்குக் காது கேட்காது ஆகையால் சலசலப்புச் சத்தமும் காதில் விழாது. அவளிடம் அதைப் பற்றி யோசனை கேட்கவும் முடியாது.

ஆனால் ஊமைராணிக்கு அதிகமான வேறு சில சக்திகள் உண்டு. கண்ணால் பார்த்தும், காதால் கேட்டு தெரிந்து கொள்ள முடியாத விடயங்களை ஆறாவது புலனின் உதவியைக் கொண்டு அவள் கண்டுகொள்வாள். அவள் அறியாத அபாயம் ஒன்றும் தன்னை நெருங்க முடியாதல்லவா?

இது என்ன? அத்தையும் கவலையோடு அடிக்கடி ஓடைக்கரையை அண்ணாந்து பார்த்துக் கொண்டு வருகிறாளே? உண்மையிலேயே அபாயம் ஏதேனும் தொடர்ந்து வருகிறதோ?

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கண்டெடுத்த கடிகாரம்



(நேற்றைய தொடர்ச்சி)

நன்கு யோசித்த மெய்யப்பன், உடனே சுகுமாரனையும் அழைத்துக் கொண்டு பொலிஸ் நிலையம் சென்று இந்த கைக் கடிகாரத்தை ஒப்படைத்து, விவரங்களை கூறினார், பொலிஸ் அதிகாரி சுகுமாரனைப் பாராட்டி அந்தக் கடிகாரத்தை பெற்றுக் கொண்டார்.

அதன் பின் சுகுமாரன் அந்த நிகழ்ச்சியை மறந்து விட்டான்.

சுமார் மூன்று மாதங்கள் ஓடியிருக்கும், ஒரு நாள் தலைமையாசிரியர் சுகுமாரனை அழைப்பதாக பள்ளி பணியாள் வந்து சொல்லவும் வகுப்பு ஆசிரியர் சுகுமாரனை தலைமையாசிரிடம் அனுப்பினார்.

எதற்கு கூப்பிடுகிறார் என்று பயந்து கொண்டே அவர் அறைக்குள் நுழைந்தவன், அங்கு தலைமையாசிரியருடன் அன்று "கைக்கடிகாரத்தை" பெற்றுக் கொண்ட பொலிஸ் அதிகாரியும் இருந்தார்.

அவர் இவனைக் கண்டவுடன் எழுந்து அவன் கையை பற்றி குலுக்கி "வெல்டன் பாய்" உன்னால் ஒரு திருட்டுக் கும்பலையே பிடிக்க முடிந்தது, என்று அவன் கையை குலுக்கினார்.

இவனுக்கும் ஒன்றும் புரியவில்லை, பிரமை பிடித்தவன் போல் நின்று கொண்டு இருந்தவனை தலைமையாசிரியர் அழைத்து அன்றைக்கு நீ ஒரு "கைக்கடிகாரத்தை" இந்த அதிகாரியிடம் கொடுத்தாய் அல்லவா? அது பக்கத்து ஊரில் கோயில் சிலை திருடிய கூட்டத்தில் இருந்த அந்தக் கூட்டத்தையே பிடித்து விட்டார்கள்.

அதுக்குத்தான் உன்னைப் பாராட்டி விட்டு போகணும் என்று வந்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல அடுத்த வாரம் ஒரு விழா வைத்து உன் அப்பா, அம்மா, உன் தங்கச்சி எல்லோரையும் கூப்பிட்டு பாராட்ட போறார்கள் என்று சொல்ல சொல்ல சுகுமாரனுக்கு ஒரே சந்தோசமாகி விட்டது.

அடுத்த வாரத்தில் நடந்த விழாவில் சுகுமாரனுக்கு பாராட்டு மட்டுமல்ல, அவனுக்கும், அவன் தங்கைக்கும் எவ்வளவு படிக்க முடியுமோ அந்த அளவுக்கு அரசாங்கமே படிக்க வைக்கும் என்று அந்த மாவட்ட ஆட்சியர் அறிவித்து விட்டார். கன்னையனுக்கும் அவன் மனைவிக்கும் இதை விட ஆனந்தம் வேறென்ன வேண்டும்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்வியும் நன்னடத்தையுமே ஒரு மனிதனை நல்லவனாக்கும். – அரிஸ்டோட்டில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அழகான தீவில் வீசுகின்ற தென்றலில் எங்கள் துயரமுளது

உலகின் 50 சிறந்த தீவுகள் அடங்கிய பட்டிய லில் இலங்கை முதலிடத்தைப் பெற்று உலகில் முதற்தர அழகான தீவு என்ற மகுடத்தைச் சூடியுள்ளது.

உலகின் 50 தீவுகளில் மிகவும் அழகான – இயற்கை வனப்பு மிகுந்த நாடாக இலங்கைத் தீவு தெரிவு செய்யப்பட்டமை நமக்கும் பெருமை தருவதாகும்.

அதேவேளை இயற்கை வனப்பு மிகுந்த – இயற்கை சீற்றம் கொள்ளாத நாடு என்ற வகையிலும் இலங்கை மிக அழகான தீவு என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

ஆனாலும் அழகான நாட்டில் அழுக்காறும் இனத்துவேசமும் கொண்டவர்கள் இருப்பதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர்.

ஆம், செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து ஒவ்வொரு நாளும் மனித எலும்புக் கூடுகள் அடையாளப்படுத்தப்படுகின்றன.

அழகான தீவுகளின் பட்டியலில் இலங்கை முதலிடத்தில் இருக்கின்றதாயினும் அவலமரணங்கள் மலிந்த மண்ணும் இலங்கை என்பதை குறித்த ஆய்வு நிறுவனம் அடிக் கோடிட்டுக் கூறவேண்டும்.

ஆம் மலைகள், காடுகள், களனிகள், அருவிகள், வனவிலங்குகள், பறவைகள் என்ற இயற்கையின் கொடை மலிந்த; ஆழ் கடல் சூழ் இலங்கைத் தீவில் தமிழ் மக்களின் கண்ணீரும் அவர்களின் கதறல்களும் கொல்லப்பட்டவர்களின் உடல்களும் கடலிடை மிதக்கும் பனிக்கட்டியின் பெரும்பகுதிபோல மறைந்தே உள்ளது.

உண்மை. குறித்த ஆய்வு நிறுவனம் இலங்கைத் தீவிலுள்ள மலையை, மரத்தை, கடலை, அருவியை கண்ணாரக் கண்டு ஆஹா எத்தனை அழகு என வியந்திருக்கலாம்.

ஆனால், குறித்த ஆய்வு நிறுவனம் ஒருக் காலேனும் செம்மணிக்கு வருகை தந்து அந்த மண்ணில் புதையுண்டுள்ள மனித எலும்புக் கூடுகளைக் கண்டிருந்தால் – அந்தத் தகவலை அறிந்திருந்தால், இத்துணை இயற்கை வளம் மிக்க அழகாபுரியாகிய இலங்கையில், தமிழினத்தைக் கருவறுத்த கொடியவர்களும் உள்ளனர் என்ற உண்மையை உணர்ந்திருக்க முடியும்.

ஆம், பேரினவாதிகள் அரசாட்சி செய்த வேளையில் – தமிழ் மக்களைக் கொல்வதற்காகவே நியமிக்கப்பட்ட படையினரால், தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்ட துயரம் இலங்கைத் தீவின் காற்றோடு கலந்துள்ளது.

ஆம், அழகான இலங்கைத் தீவில் வீசுகின்ற தென்றலில் எங்கள் தமிழ் உறவுகளின் அவலக் குரல்களும் எங்கள் குழந்தைகளின் இறுதி மூச்சுக்களும் கலந்தே உள்ளன என்பதை குறித்த ஆய்வு நிறுவனம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

# கந்தரோடையில் பௌத்த மத்திய நிலையம் நீதிமன்ற நடவடிக்கைக்குத் தயார்

## வலி.தெற்கு பிரதேச தவிசாளர் தியாகராஜா பிரகாஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தரோடையில் பௌத்த மத்திய நிலையம் அமைப்பதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைக்குச் செல்வதற்குத் தயாராக இருப்பதாக வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் தவிசாளர் தியாகராஜா பிரகாஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்.வலிகாமம்தெற்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று சபையின் தவிசாளர் தியாகராஜா பிரகாஸ் தலைமையில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய தவிசாளர் யாழ்.வலிகாமம் தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட கந்தரோடைப் பகுதியில் அமைந்திருக்கும் தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமான இடத்தில் பௌத்த மக்கள் தொடர்ச்சியாகப் பார்வையிடுவதற்காக வந்து கொண்டிருக்கிறார்கள்.

குறித்த பகுதியில் பிக்கு ஒருவர் காணி ஒன்றைக் கொள்வனவு செய்து பௌத்த மத்திய நிலையம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

அதற்காகப் பொது மக்களிடமிருந்து நிதி வசூலிப்பு செய்கின்ற ஒரு பெயர் பலகையும் அந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது.

சட்டவிரோத கட்டடத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதன் முதற் கட்டமாக அவருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டிருக்கின்றது.

குறித்த பகுதியில் கட்டட நிர்மாணத்தை நிறுத்துமாறு என்னால் பிரசுரம் ஒட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக அங்கு வரும் மக்களுக்கு தமிழ் பௌத்தம் இருந்த வரலாற்றை அத்தோடு இந்துமத, சைவமத வரலாற்றை மறைக்கும் முகமாக அங்கே வருகின்ற கருத்துக்கள் பகிரப்பட்டு வருகின்றது.

இது ஒரு தவறான செயல் இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். அந்த இடத்தில் தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தமான பகுதிகளில் வெளிநாட்டு நிறுவனம் ஒன்று அகழ்வாராய்ச்சியைச் செய்து வருகின்றது. அருகில் இருக்கும் காணிகளில் இந்த அகழ்வாராட்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அண்மையில் நான் அறிந்தேன் ஆய்வுகளின் போது மூன்று அடி உயரமான ஒரு கிருஷ்ணர் சிலை அங்கே கிடைக்கப் பெற்றிருக்கின்றது. அதனை மூடி மறைத்து குறித்த பகுதியில் ஆய்வுகளை மேற் கொள்ளாமல் வேறு இடங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இந்த பௌத்த மயமாக்கல் என்பது எங்களுடைய பிரதேசத்தில் அதாவது தையிட்டியை போல் மீண்டும் கந்தரோடையிலும் தொல்லியல் திணைக்களத்தின் அனுசரணையுடன் தற்போதைய அரசாங்கமும் பௌத்த மயமாக்கலை எமது பிரதேசத்தில் அமுல்படுத்த நினைக்கின்றது.

இந்த நடவடிக்கைகளை நாங்கள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம் அதற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைக்குச் செல்வதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம் எனத் தெரிவித்தார். (ம-7,33)

# கற்கரை கற்பக விநாயகரின் மகோற்சவம் இன்று ஆரம்பம்

குப்பிழான் திருவருள் மிகு கற்கரை கற்பக விநாயகர் ஆலய விசுவாவசு வருட மகோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு திருக்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆவணி அவிட்டத்தினைத் தீர்த்தோற்சவமாக கொண்டு பத்துத் தினங்கள் வெகு சிறப்புற இடம்பெறவுள்ளது.

இவ்வாலய மகோற்சவம் தனில் எதிர்வரும் 08.08.2025 வெள்ளிக்கிழமை இரதோற்சவம் மறுநாள் ஆவணி அவிட்ட நன்னாளில்கற்பக விநாயகப்பெருமானின் தீர்த்தோற்சவமும் பக்தி பூர்வமாக இடம்பெறவுள்ளது. தொடர்ந்து கொடியிறக்கம், சுப்பிரமணியர் திருக்கல்யாணம், வைரவர் உற்சவம், ஊர்வலம், அன்னாபிசேகம் ஆகிய உற்சவங்கள் முறையே இடம்பெற்று எதிர்வரும் 14.08.2025 வியாழக் கிழமை காலை பிராயசித்த அபிசேகத்துடன் கற்கரை கற்பக விநாயகரின் மகோற்சவம் இனிதே நிறைவடையவுள்ளது. (ம-7)

# இலங்கையின் ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு

## அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி

ஒரு சதவீதமாக இருந்த, கடந்த 10 ஆண்டுகளுக்கான ஏற்றுமதி வருமான வளர்ச்சி தற்போது 7 சதவீதமாக அதிகரித்துள்ளதாகக் கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபையால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டின் வரலாற்றில் மிக உயர்ந்த ஏற்றுமதி வருமானம் இந்தாண்டு எட்டப்பட்டது.

விவசாய உற்பத்திகள் மேற்கொள்ளப்படாத நிலங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டி அதனை ஒரு தரவுவங்கியாகப் பேணவுள்ளதாகவும் அத்தகவல்களின்படி அடுத்த ஐந்து வருடங்களில் ஏற்றுமதி வருவாயை அதிகரிக்க பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

பயிரிடக் கூடியதும் ஆனால் தற்போது பயிர்ச் செய்கை மேற்கொள்ளாத நிலங்கள் பற்றிய தகவல்களைக் கொண்ட ஒரு தேசிய நில வங்கி நிறுவப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் மேற்படி நிலங்கள் பற்றிய தகவல்களை மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கி அவர்கள் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் ஏற்றுமதி வருவாய் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் இந்த நிலங்கள் அந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (ம-7)

# பருத்தித்துறை மரக்கறி சந்தை இடமாற்றம்

## நகர சபையில் தீர்மானம்

பருத்தித்துறை மரக்கறி சந்தையை நகர சபை சந்தை கட்டடத் தொகுதிக்கு இடமாற்ற பருத்தித்துறை நகர சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர சபையின் தவிசாளர் டக்ளஸ் போல் தலைமையில் நேற்று (30) புதன் கிழமை சபை கூடிய வேளையிலேயே குறித்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது

மரக்கறிச் சந்தையை நகரின் மையப்பகுதியான நகரசபை சந்தை கட்டடத் தொகுதிக்கு மாற்றுவது எனவும், முதலில் கீழ்த்தளத்திற்குக் கொண்டுவருவது தொடர்பான சாத்திய ஆய்வினை பொறியியலாளர் தலைமையில் நகர புத்திஜீவிகள், நலன்விரும்பிகளை இணைத்து ஒரு குழுவை அமைத்து மேற்கொள்வது எனவும் அது சாத்தியமாயின் அதை நடைமுறைப்படுத்துவது எனவும் அவ்வாறு அது சாத்தியமில்லை எனின் சந்தைக் கட்டடத்தின் மேற்தளத்திற்கு மரக்கறி சந்தையைக் கொண்டு செல்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த தீர்மானத்திற்கு ஆதரவாக ஏழு வாக்குகளும் எதிராக ஆறு வாக்குகளும் அளிக்கப்பட்டன அந்த வகையில் மரக்கறிச் சந்தையை இடம்மாற்றுவது தொடர்பில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஒரு மேலதிக வாக்கினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 25

**சொக்கன்**

அடுத்து உள்நாட்டுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான தனி உளவு நிறுவனம் இதற்குப் பொறுப்பு ஐஸர் ஹரேல் மற்றும் யோஸெஃப் யிஸ்ரேலி.

மூன்றாவதாக வெளி அரசியல் விவகாரங்களைக் கவனிக்கும் ஓர் உளவுத்துறைப் பிரிவு அதன் தலைவர் ரீவென் ஷிலோஹ்.

சும்மா பெயர்களை மட்டும் படிக்கிற நமக்கே இப்படித் தலை சுற்றுகிறது. அப்படியானால் நிஜமாகவே இந்த உளவுப் பிரிவுகளெல்லாம் தனித்தனியாக இயங்கத் தொடங்கிய போது இஸ்ரேலில் என்னென்ன குழப்பங்கள் முளைத்திருக்கும் என்று கொஞ்சம் யோசித்துக்கொள்ளுங்கள்!

ஒருவேலை உருப்படியாக நடக்க வேண்டுமென்றால் அதற்கு யாரேனும் ஒருவர் மட்டும் பொறுப்பேற்கவேண்டும். அப்படியில்லாமல் ஒன்பது பேர் ஒரே நேரத்தில் உள்ளே புகுந்து கிண்டினால் உப்புமா காலி.

அடுத்த பல மாதங்கள் இஸ்ரேலில் எந்த உளவு வேலையும் உருப்படியாக நடக்கவில்லை. யாராவது எதையாவது செய்ய முயன்றால் போச்சு மற்ற உளவு நிறுவனங்களுக்கு மகா கோபம் வந்தது. டீச்சர் டீச்சர் இவன் என் பென்சிலைப் பிடுங்கிறான் டீச்சர் என்று குற்றம் சட்டுகிற எல்.கே.ஜி. பிள்ளைகளைப் போல் உடனே பிரதமரிடம் ஓடினார்கள். பாருங்க சார் இந்த ஆள் எங்க அதிகாரத்தில தலையிடறார்.

உங்க அதிகாரமா? அது என்னது?

அங்கேதான் குழப்பமே. ஒன்றுக்கு மூன்று உளவு நிறுவனங்களைத் தொடங்கி வைத்த பிரதமர் யாருக்கு என்ன அதிகாரம் என்பதைத் தெளிவாக வரையறுக்கவே இல்லை. அவர் குத்துமதிப்பாகச் சொன்ன எல்லைகளை ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகப் புரிந்து கொண்டார்கள். இதனால் யார் எதைச் செய்யலாம் எதைச் செய்யக் கூடாது என்பதில் ஏகப்பட்ட சண்டை.



அதற்குமேலாக பட்ஜெட் கலவரம் ஒவ்வோர் உளவு நிறுவனமும் தன்னை அதிமுக்கியமாக நினைத்துக்கொண்டு எக்ஸ்ட்ரா நிதி ஒதுக்கச் சொல்லிக் கேட்டது. அவ்ளோ காசுக்க நான் எங்கே போறது? என்று பிரதமர் கையை விரித்ததும் ஆளாளுக்குக் கோபித்துக் கொண்டு மூலை யில் உட்கார்ந்துவிட்டார் கள். இது என்ன தேங் காய் மூடிக் கச்சேரியா? பட்ஜெட் இல்லாம நாங்க எப்படி வேலை பார்க்கிறது?

இவ்வளவு பேசுகிறார்களே ஏதாவது செயலில் காட்டுகிறார்களா என்றால் அதுவும் இல்லை. ஒரு முக்கியமான வேலை என்று வரும்போதுதான் அது என்னோட பொறுப்பு இல்லை அவனைக் கேளுங்க என்று மாற்றி மாற்றிக் கை காட்டிவிட்டு ஒதுங்கிக் கொண்டார்கள். அல்லது அந்த ரிப்போர்ட்டா? அது ஏற்கெனவே என்னோட டிபார்ட்மென்ட்க்கு அனுப்பிட்டேனே உங்களுக்குக் கிடைக்கலையா? என்று வெறுப்பேற்றினார்கள். கடைசியில் பிரதமருக்கு டென் ஷன் ஏறியது தான் மிச் சம்.

*1949 ஜூலையில் ரீவென் ஷிலோஹ் பிரதமரைச் சந்தித்தார். நம்மோட உளவு நிறுவனங்கள் ஒவ்வொன்றும் கண்டபடி தறிகெட்டு ஓடிகிட்டிருக்கு இதையெல்லாம் ஒழுங்குபடுத்தி மூக்கணாங்கயிறு மாட்டணும் என்றார்.*

பிரதமரும் கொஞ்ச காலமாக அதைத்தான் யோசித்துக்கொண்டிருந்தார். இப்படி நீயா நானா போட்டியிலேயே உளவுத்துறையின் நேரமெல்லாம் வீணாகிக் கொண்டிருந்தால் இஸ்ரேலுக்குத்தான் ஆபத்து உடனடியாக ஏதாவது செய்யவேண்டும். நீங்க என்ன நினைக்கிறீங்க ரீவென்? இந்தப் பிரச்சினையைத் தீர்க்கிறதுக்கு உங்க யோசனை என்ன?

வெவ்வேற வேலைகளைச் செய்யிறதுக்கு தனித்தனி உளவுத்தறை நிறுவனங்களை அமைக்கிறது தப்பில்லை. ஆனா உங்க நேரடிக் கட்டுப்பட்டில் ஒரு விசேஷ டிபார்ட்மென்ட் இருக்கணும். அவங்களுக்குத் தேவையான பட்ஜெட் கூடுதல் அதிகார மெல்லாம் கட்டி மேய்கிறதுக்கு வழி செய்யணும். எல்லோரும் சேர்ந்து ஒத்துழைத்தால் மட்டும் தான் இது நடக் கும்.

அது புரியுது ஆனால் இவங்க எல்லாரும் தான் ஆளுக்கு ஒரு திசையில் ஓடுறாங்களே இவங்களை எப்படி ஒண்ணா வேலை செய்ய வைக்கிறது.

வேற வழியில்லை மிஸ்டர் பிரதமரே நீங்கள் மென்னு முழுங்கிறதை நிறுத்திட்டு அதிகாரத்தைக் கையில எடுக்கணும். சாட்டை இல்லாம மாடு பணியாது. வண்டி ஓடாது.

பிரதமர் சம்மதித்தார். ரீவென் ஷிலோஹ் ஆலோசனைப்படி இஸ்ரேலின் பல்வேறு உளவு நிறுவனங்களை ஒருங்கிணைத்துச் செயற்படுத்தவதற்கான ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டது.

ஆனால் பலரும் எதிர்பார்த்ததுபோல் இந்த ஒருங்கிணைப்புக் கமிட்டியும் பெரிதாக எதையும் சாதித்து விட வில்லை. காரணம் அவர் களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியும் குறைவு அதிகாரங்களும் போதுமான அளவு இல்லை.

பிரதமருக்கு எரிச்சல். இன்னும் எத்தனை நாளைக்குதான் இப்படி ஒத்தையா ரெட்டையா விளையாடிக் கொண்டிருப்பது? குறைந்தபட்சம் வெளிநாட்டு சமாசாரங்களைக் கவனிப்பதற்காவது இஸ்ரேலில் ஒரு நல்ல வலுவான திறமையான உளவுத்துறை வேண்டாமா?

*1951 ஆம் ஆண்டு மார்ச் 2 ஆம் திகதி இஸ்ரேலில் உள்ள அனைத்து உளவுத்துறை நிறுவனங்களின் தலைவர்களுக்கும் ஓர் அவசர அழைப்பு வந்தது. பிரதமர் உங்களைச் சந்திக்க விரும்புகிறார்.*

அந்த திடீர் கூட்டத்தில்தான் இஸ்ரேல் பிரதமர் டேவிட் பென்குரியன் ஹ மொசாட் லிடியும் என்கிற புதிய உளவுத்துறையைப் பற்றி அறிவித்தார். சுருக்கமாக மொசாட் என்று அழைக்கப்பட்ட இந்த உளவு நிறுவனத்தின் முதல் தலைவராக ரீவென் ஷிலோஹ் நியமிக்கப்பட்டார். ஏற்கெனவே இஸ்ரேலில் இருக்கிற குழப்பங்கள் போதாதா? இன்னொரு உளவுத் துறை எதற்கு?

மற்ற உளவு நிறுவனங்களுக்கும் மொசாட்டுக்கும் முக்கியமான வித்தியாசம் இது பிரதமரின் நேரடிக் கட்டுப்பாட்டில் செயற்படும். இஸ்ரேல் எல்லைக்கு வெளியே எந்த உளவு வேலை என்றாலும் அதற்கு இவர்கள்தான் பொறுப்பு இராணுவம் காவல்துறை , உள்துறை அமைச்சகம், வெளியுறவுக் கமிட்டி என்று யாரும் அவர்களுடைய அதிகாரத்தில் குறுக்கிடமுடியாது. அவர்கள் ஒரு வேலையைச் செய் வேண்டும் என்று தீர்மானித்துவிட்டால் பிரதமரைத்தவிர வேறு யாரும் மொசாட் டைக் கேள்வி கேட்க முடியாது. மொசாட் டுக்காக இந்த வருடம் இருபதாயிரம் இஸ்ரேலிய பவுண்ட்கள் பட்ஜெட் ஒதுக்கியிருக்கிறேன் என்றார் பிரதமர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாம்புக்கடிக்கு...

இதில் புத்தூர் மேற்குப் பகுதியைச் சேர்ந்த செல்வச்சந்திரன் மிரோஜன் (வயது-27) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞன் நேற்று முன்தினம் (29) அயலிலுள்ள ஆலயத்தில் இசை நிகழ்வைப் பார்வையிடச் சென்றுள்ளார்.

இசை நிகழ்விற்குச் சென்ற மகன் திரும்பி வராத காரணத்தால் தாயார் நேற்றுக் காலை 5 மணியளவில் தேடிச் சென்றுள்ளார். இதன்போது குறித்த இளைஞன் வீட்டு ஒழுங்கைக்குள் அசைவற்றுக் காணப்பட்டார்.

உடனே புத்தூர் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றவேளை அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார்.

பாம்பு தீண்டியதால் மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (ம-7,33,104)

## யாழ்.நீதிமன்றில்...

2011ஆம் ஆண்டு காணாமல் ஆக்கப்பட்ட இரண்டு மனித உரிமை ஆர்வலர்களான லலித் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் தொடர்பாக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு தொடர்பான வழக்கில் சாட்சியமளிக்கத் தயாராக இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பான மேன்முறையீட்டு மனு நேற்று உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது, கோட்டாபய ராஜபக்ஷ சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

எவ்வாறாயினும் தற்போதுள்ள பாதுகாப்புக் காரணங்களுக்காக தமது கட்சிக்காரர் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் சாட்சியமளிப்பதற்குப் பதிலாக கொழும்பு நீதிமன்றமொன்றில் சாட்சியமளிக்கத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி சட்டத்தரணி நேற்று நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார்.

இதன்போது மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு, இந்தக் கோரிக்கையை இன்றிலிருந்து (நேற்று) ஒரு வாரத்திற்குள் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்து, பொருத்தமான உத்தரவுகளைப்பெறநடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வாவுக்கு அறிவித்தது.

மனுதாரர்கள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி நுவான் போபகேவும் அந்தக் கோரிக்கைக்கு தமது இணக்கத்தைத் தெரிவித்தார்.

அதன்படி மேன்முறையீட்டு மனுவின் விசாரணையை நிறைவு செய்வதற்கு நீதியரசர்கள் குழாம் தீர்மானித்தது.

2011 டிசம்பர் 9ஆம் திகதி லலித் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பாக அவர்களது உறவினர்களால் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்குத் தொடர்பாக சாட்சியமளிக்க நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு, சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் பாதுகாப்புச் செயலாளராக பதவி வகித்திருந்த கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, 2019ஆம் ஆண்டு அறிவித்தல் அனுப்பப்பட்டது.

எனினும் பாதுகாப்பு காரணங்களுக்காக சாட்சியமளிக்க யாழ்ப்பாணம் நீதிமன்றத்திற்குச் செல்ல முடியாது எனக் கூறி, குறித்த அறிவித்தல் அனுப்பும் முடிவுக்கு எதிராக கோட்டாபய ராஜபக்ஷ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார்.

குறித்த மனுவை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்ட அறிவித்தலை இரத்துச் செய்திருந்தது.

இந்நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் குறித்த தீர்ப்பை இரத்துச் செய்யக் கோரி, காணாமல் போனவர்களின் உறவினர்கள், உயர் நீதிமன்றத்தில் இந்த மேன்முறையீட்டைத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 4 மனித எச்சங்...

டுள்ளதோடு ஏற்கெனவே அடையாளப்படுத்தப்பட்ட 3 மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றைய நாள் முடிவில் இதுவரை 115 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 102 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (ம-7,33,104)

## நாவற்...

அவர்களில் 3 இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டமைதொடர்பில் அவர்களது பெற்றோரால் கடந்த 2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்த ஆட்கொணர்வு மனுக்கள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன.

அதன்போது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் இந்த ஆட்கொணர்வு மனுக்களை பூர்வாங்க விசாரணையுடன் தள்ளுபடி செய்ய சட்டமா அதிபர் திணைக்களம் பல ஆட்சேபனைகளை முன்வைத்தது. எனினும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனைத்து ஆட்சேபனைகளையும் நிராகரித்த யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம், மனுதாரர்களின் கோரிக்கைகள் தொடர்பில் விசாரணை ஒன்றை முன்னெடுத்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றுக்கு உரிய பரிந்துரையை வழங்குமாறு சாவகச்சேரி நீதவான் நீதிமன்றுக்கு உத்தரவிட்டார்.

அதன் அடிப்படையிலேயே சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி தீர்ப்புக்காகத் திகதியிடப்பட்டுள்ளது. (ம-7,30,33,104)

## எதிர் மனுதாரர்...

மாகாண மேல் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வடமாகாண மேல் நீதிமன்ற நீதிபதி டி.எஸ்.சூசைதாசன் முன்னிலையில் குறித்த மனு நேற்று முன்தினம் (29) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்த நிலையில், பிரஸ்தாபப் போட்டி முடிவு சுற்றுநிருபத்திற்கு முரணாக உள்ளதென்பதையும் முகத்தோற்றளவில் வழக்கொன்றுள்ளதென்பதையும் கருத்தில் கொண்டு, எதிர்மனுதாரர்களுக்கு அறிவித்தல் சேவிக்குமாறு மன்று நேற்று (30) கட்டளையிட்டதுடன், எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 20ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ந)


மஹஜன சம்பத — திகதி 2025.07.30 — சீட்டிழுப்பு இலக்கம் 5906 — S 1 1 9 8 8 0
அத சம்பத — S 9 8 8 0 — சீட்டிழுப்பு இலக்கம் 481
National Lotteries Board

சுப தவசக் — திகதி 2025.07.30 — சீட்டிழுப்பு இலக்கம் 0822 — விருச்சிகம் 04 16 25 38

தன நிதானய — திகதி - 2025.07.30 — சீட்டிழுப்பு இலக்கம் - 1936 — Y 08 17 34 72 Y — Double Chance 58765

மெகா பவர் — திகதி 30/07/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2254 — Q 19 15 29 47 56

ஜய ஜய — திகதி 2025.07.30 — சீட்டிழுப்பு இலக்கம் 0174 — G 5 1 8 6

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4148 — சீட்டிழுப்பு திகதி 30.07.2025 — Z 03 22 33 80 — Z

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.07.30 — சீட்டிழுப்பு இலக்கம் 1215 — கன்னி 09 50 52 60 கன்னி — 89547 — 50

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி வாசனா — 30.07.2025 — வெற்றி வாரம் 0614 — X 4 3 4 9 4 7 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,920,263.20 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2880 — சீட்டிழுப்பு திகதி 2025.07.30 — தினம் புதன்கிழமை — 02 10 13 22 J — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,118,888.80 — DLB

சனிதா — திகதி 30.07.2025 — வெற்றி வாரம் 5041 — 10 35 68 77 B — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,145,766.40 — ரூ. 50,000/-

ஜயோதா Jayoda — திகதி 2025.07.30 — வெற்றி வாரம் 2148 — 16 26 40 61 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 30,762,292.80 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4592 — சீட்டிழுப்பு திகதி 30.07.2025 — தினம் புதன்கிழமை — 24 45 58 59 மீனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,027,079.60 — DLB

லக்பதி — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — F 35 32 49 69 72 — 2056 — 30.07.2025 புதன்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.585,145,484.60 — DLB

அட கோடிபதி ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம்: 2706 — சீட்டிழுப்பு திகதி: 2025.07.30 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.77,089,602.40 — 02 31 37 65 B — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியம்

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி
மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி |
இருதயவலி | தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்.
வயிற்றுப்புண் | அல்சர் மிகச்சிறந்த மூலிகை,
Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(1392)



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

# ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3534)

076 825 7716 (ஆகாஸ்)


## குழந்தையை ...

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வின் இரண்டாம் கட்டத்தின் 25 ஆம் நாள் அகழ்வு யாழ்ப்பாண நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா மேற்பார்வையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வுப் பணி தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சட்டத்தரணி ரணித்தா ஞானராஜா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டபோது பெரிய மனித எலும்புத் தொகுதியுடன் சிறிய குழந்தையின் மனித எலும்புத் தொகுதியும் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பெரிய மனித எலும்புத் தொகுதியுடன் சிறிய எலும்புத் தொகுதியானது அரவணைக்கப்பட்ட நிலையில் குறித்த எலும்புத் தொகுதிகள் காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

மேலும் குறித்த எலும்புத் தொகுதிகள் சுத்தப்படுத்தப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டதுடன் நேற்றுக் காலை முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது என்றார்.(ம-7,33,104)


A/L - 2025
Accounting Seminar

- பாடத்திட்டம் முழுமையாக பூர்த்தியாக்கப்படும்.
- முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களினை உள்ளடக்கிய கையேடு.

ஆரம்பம் :
01.08.2025 மதியம் 2.15 மணி (வெள்ளி)
இடம் :
NEC - யாழ்.நகர்

இலங்கை பூராகவும் Zoom Online ஊடாக வகுப்புக்கள் நடைபெறும். 04.08.2025 (திங்கள்) இரவு (08.15)
உங்களுக்கான புதிய பதிவுகளினை விரைவாக மேற்கொள்ளலாம்.

க.பா.பாலகஜன் (1387)
077 452 0043


## மோ.சைக்கிள் ...

இதில் முல்லைத்தீவு உடையார்கட்டுப் பகுதியைச் சேர்ந்த இளையதம்பி நந்தகுமார் (வயது-70) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் அச்சுவேலியில் உள்ள உறவினரை சந்திக்க வந்துள்ளார்.

இந்நிலையில் இவர் 27ஆம் திகதி இரவு அச்சுவேலிப் பகுதியில் இடது பக்கத்தில் இருந்து வலது பக்கத்திற்கு வீதியைக் கடப்பதற்கு முயற்சித்துள்ளார்.

இதன்போது வீதியால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் இவர்மீது மோதியுள்ளது.

இதில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி கடந்த 28ஆம் திகதி உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகள் நேற்று மேற்கொள்ளப்பட்ட நிலையில் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ம-7,60,104)


## சிறுநீரகம் தேவை

15 வயது சிறுவனுக்கு (O+)
சிறுநீரகம் மாற்ற வேண்டியுள்ளது
சிறுநீரகம் தந்து உதவுபவர்கள்
இருந்தால் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு (4929)
077 070 0286



## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் உள்ள பிரபல்யமான பிடவை விற்பனை நிறுவனத்திற்கு அனுபவமுள்ள, பழக விரும்பும் ஆண், பெண் வேலையாட்கள் தேவை.

- விற்பனையாளர்
- பில் கிளாக்
- பைக்கிங் செய்பவர் உடன் தேவை.

(C-3531)
074 138 8156



## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் நெல்லியடியில் இயங்கும் சைவ உணவகத்திற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை.

- உணவு பரிமாறுபவர் (சப்பிளையர்)
- பார்சல் கட்டுபவர்
- சமையல் உதவியாளர்.

தங்குமிடம், உணவு வழங்கப்படும்.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
(C-3533)
077 219 0128



கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3950/-
11-16 Kg 2650/-
21-27 Kg 2470/-

குறைந்த விலை - நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
(C-3535)

UK 11Kg - 1400/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2000/-
Swiss 11Kg - 2480/- Australia 11Kg - 2145/- Italy 11Kg - 2260/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237



## யோக்கட் கொள்வனவுகள்

பாடசாலைகளுக்கு அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
அதிபர்/ ஆசிரியர் எம்மை தொடர்பு கொள்ளலாம்.
45/=
70/=
Happy Supermarket
உரும்பிராய்
(1391)
+ 94 76 800 65 00


## கொழு...

155 இந்தியப் பிரஜைகள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பிலுள்ள ஒரு கட்டடத்தில் சர்வதேச இணையவழி விளம்பர மற்றும் சூதாட்டச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஐ.டி நிறுவனம் இயக்கிய பின்தள அலுவலகத்தை சுற்றிவளைத்த போது குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் அனைவரும் 25-45 வயதுக்குட்பட்ட ஆண்கள். இவர்கள் ஒரு மாதம் முதல் ஒரு வருடம் வரை வீசா காலத்தை மீறி வேலை செய்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. (ம-7)


# ஓராண்டு நினைவுடனே



# ஜெயகாந்தன் சிவதர்சன்



பிறப்பு
07-12-1997

இறப்பு
11-08-2024

ஓராண்டு சென்றாலும் - எங்கள்
தலைமகனே நீ இல்லாத வாழ்வு
நிலையில்லாத நீர்த்துளியானது - எங்கள்
நினைவில் உன் முகம் உன் நாமம்
வந்திங்கு வாட்டுதடா நிதமும்.

மீண்டும் நீ எம்மிடம் வருவாய் என்ற
நம்பிக்கையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோமடா
எம் தர்ஷா!
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம் (1359) குடும்பத்தினர்



## வெளிநாட்டில் வசிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை

1988 கனடா, 1996 லண்டன், 1987 ஜேர்மனி,
1978 பிரான்ஸ் (விவாகரத்தானவர்) போன்றவர்களிற்கு
உள்நாட்டு மணமகள்கள் தேவை.
தரகர்கள் தொடர்பு கொள்ளத் தேவையில்லை. (1390)

077 408 8241/077 041 3462



## மணப்பெண் தேவை

01. கரவெட்டி, இந்து, 1986, பூரம், BSc, Uk Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 27669
02. காரைநகர், இந்து, 1990, ஆயிலியம், ACCA, Own Business, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 28386
03. யாழ்ப்பாணம், இந்து, 1982, அத்தம், Masters in Electrical Engineering (USA), Canada + USA Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 24750
04. நெடுந்தீவு, இந்து, 1979, விசாகம், CIMA Accountant, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
05. கொக்குவில், இந்து, 1989, திருவாதிரை, Msc, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை 26001.
06. அராலி, இந்து, 1986, பூரம், AL, Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 25816
07. மானிப்பாய், இந்து, 1981, அவிட்டம், Fashion Management, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 25753
08. வேலணை, இந்து, 1989, உத்தரம், B Eng(Hons) Power and Control மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 26499
09. புங்குடுதீவு, இந்து, 1983, அவிட்டம், Graduate, ACCA, Accountant, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.26294
10. காரைநகர், இந்து, 1988, சதயம், MSc in Engineering Management, UK மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 25615

(C-3537)

எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org